Registered as a news paper. பக்கங்கள்: பத்து

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

றொறாயல்ஸ் ஒளிச்சுடர்
பல் & மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 கார்த்திகை 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷவ்வால் 05 (30.11.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்:61

# வயற்காவலுக்குச் சென்ற மூன்று முஸ்லிம்கள் கிண்ணியாப் பிரதேசத்தில் வெட்டிக்கொலை!

(திருகோணமலை)

திருகோணமலை கிண்ணியாப் பிரதேசத்திலுள்ள நடுத்தீவுக் கிராமத்தில் - வயற்காவலுக்குச் சென்றுகொண்டிருந்த மூன்று முஸ்லிம்கள் நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாதோரால், வெட்டியும், குத்தியும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தாவூர் முகமது பசீர், முகமது சுபஜீர், அப்துல் கசின் ஆகியோரே வெட்டிக் கொல்லப்பட்டவர்களாவர்.

இதனையடுத்து, கிண்ணியாப் பிரதேசத்தில் பதற்றத்தைத் தணிக்கும் பொருட்டு நேற்று மாலை ஆறு மணியிலிருந்து இன்று காலை ஆறு மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுல்

## பதற்றநிலையை அடுத்து ஊரடங்கு அமுல்

படுத்தப்பட்டுள்ளதென திருகோணமலையிலுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த 23 ஆம் திகதி பைசல் நகரில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலை அடுத்தும், 24 ஆம் திகதி மரக்கறி வண்டிமீதான கைக்குண்டுத் தாக்குதலையடுத்தும் ஏற்பட்ட பதற்றம் காரணமாக ஆலங்கேணிக் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த 35 தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த 137 பேர் அன்பு வழிபுரம் கலைமகள் வித்தியாலயத்திலும், மற்றொரு பகுதியினர் ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயத்திலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவர்களுக்கான நிவாரண விநியோகங்களை, திருகோணமலை பல நோக்கு கூட்டுறவுச் சங்க லொறிகளில் ஏற்றிவந்தவேளை, முஸ்லிம் மக்கள் இவற்றைச் செல்லவிடாது தடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து இராணுவ வாகனங்களில் மாற்றப்பட்ட நிவாரணப் பொருட்கள் தமிழ்மக்களுக்கு கொண்டுசென்று கொடுக்கப்பட்டது.

நேற்றையதினம் தொண்டர் நிறுவனங்களால் சேகரிக்கப்பட்ட பொருட்களை ஆலங்கேணி மக்களுக்குக் கொடுக்கச் செல்வதற்கு பொலிஸ் பாதுகாப்பினைக் கோரியபோது, அதற்கு தற்போதைய பதற்றநிலையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கமுடியாதென பொலிஸார் மறுத்துவிட்டனர். இதனையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக கடற்படையினரின் படகுகளில் இந்த உணவுப் பொருட்களினை தொண்டர் நிறுவனங்கள் கொண்டு சென்று கல்லடி இராணுவ முகாம் பகுதியூடாக ஆலங்கேணி பகுதிமக்களுக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை அரசியல் நெருக்கடியைத் தீர்க்க

# சந்திரிகா முன்வைத்த திட்டத்தை ஐ.தே.மு அரசாங்கம் நிராகரிப்பு!



(கொழும்பு)

**தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளைத் தீர்த்து, சமாதான முயற்சிகளைத் தொடருவதற்காக ஜனாதிபதி சந்திரிகாவின் சார்பில் முன்வைக்கப்பட்டிருந்த யோசனையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.**

**மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.மு.அரசாங்கத்திடம் இருந்து பறித்ததால், விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் ஸ்தம்பித நிலையை அடைந்தன.**



இந்தத் தேக்கநிலையைத் தவிர்ப்பதற்காக - சமாதான முயற்சிகளைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்தும் செல்லும் வகையில், அவருடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து, அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள ஜனாதிபதி சந்திரிகாவின் சார்பில் யோசனை முன்வைக்கப்பட்டது.

ஏழு பக்கங்கள் அடங்கிய இந்தத் திட்டங் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு துறைமுகத்தில் 2 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நுழைந்ததாகக் கூறி இரண்டு தமிழ் இளைஞர்களை கொழும்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்த அந்த இரு இளைஞர்களையும் பொலிஸார் கொழும்பு மேலதிக நீதவான் மொகமட் இர்ஷதீர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர்செய்தனர். இவர்கள் இருவரையும் அடுத்த மாதம் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

கைதான சந்தேக நபர்கள் தாம் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்துக்கு சென்று கொண்டிருந்ததாக தெரிவித்துள்ளனர். இந்த விடயம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மழை இன்றும் தொடரும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு,வடமத்திய, ஊவாமாகாணங்களில் இன்று தொடர்ந்தும் இடியுடன் கூடிய மழை பெய்யும் என, வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த மழை நாளையும் தொடர்ந்து பெய்யும் என தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரி

# யாழ் -வன்னி கட்டளை அதிகாரியாக

# கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரி தொடர்ந்தும் பதவி வகிப்பாரா?

## இன்றைய கூட்டத்தில் முடிவு தெரியும்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவராக ஆனந்தசங்கரி தொடர்ந்தும் பதவிவகிப்பாரா என்பதை, கட்சியின் மத்திய குழு ஆராயவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு கட்சி அலுவலகத்தில் நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து ஆராயவுள்ளதாக, கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவராக இருக்கும் வி.ஆனந்தசங்கரிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றிய- திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட கிளைகள் இது தொடர்பாக ஆராயுமாறு மத்திய குழுவிடம் கோரியிருந்தன.

இதனையடுத்து, இன்று கூட்டணியின் அனைத்து மத்திய குழு உறுப்பினர்களும், கலந்துகொள்ளும் இந்தக் கூட்டத்தில தற்போதைய அரசியல் நிலமை சமாதானச் செயற்பாடுகள் உட்பட, பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

# யாழ் - வன்னி கட்டளை அதிகாரியாக சரத்பொன்சேகா நியமிக்கப்படலாம்?

## கொழும்புப் பத்திரிகை தகவல்



மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிராந்திய இராணுவ நடவடிக்கைகளுக்கான கட்டளை அதிகாரியாக நியமிக்கப்படலாம் என்று, திவயின வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுக்கான கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா, கடந்த வாரம் தொண்டர் படைத் தளபதியாக நியமிக்கப்பட்டு கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்தத் திடீர் இடமாற்ற நடவடிக்கை குறித்து சிஹல உறுமய மற்றும் பௌத்த பிக்குகள் அங்கம் வகிக்கும் அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களும் கடும் கண்டனம் தெரிவித்தன.

மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு தொண்டர் படைத்தளபதியாக இடமாற்றம் வழங்கியதையிட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மனம் வருந்தியதாகவும், இந்த நடவடிக்கைக்கு பரிகாரமாகவே

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி வல்லிபுரக்கோவில் பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல்!

## காயமுற்ற இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(வடமராட்சி)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோவிலை அண்டிய பகுதியில் முயல்வேட்டைக்குச்சென்ற 21 பேரில் ஏழு பேரை இராணுவத்தினர் கைதுசெய்து பலமாகதாக்கிய பின்விடுவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது - துன்னாலை குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 21 பேரடங்கிய குழுவினர், வல்லிபுரம் பகுதிக்கு வேட்டைக்குச் சென்றுள்ளனர். அந்தப் பகுதியில் முகாம் அமைத்திருக்கும் படையினர் காரணம் எதுவும் இல்லாமல் இவர்களைத் தாக்க முற்பட்ட வேளை,பீதியடைந்த இவர்கள் அங்கிருந்து தப்பியோட முற்பட்டதையடுத்து அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் ஏழுபேரைப் பிடித்து பலமாகத் தாக்கியுள்ளனர்.

இவ்வாறு படையினரின் மோசமான தாக்குதலின் பின் விடுவிக்கப்பட்டவர்களில் மகேந்திரம் - மன்மதராசா (வயது-24) துன்னாலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி பறித்த அமைச்சுக்களுக்கு பிரதி அமைச்சர்களாக பொ.ஐ.முவினர்!

## சிங்களப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடமிருந்து ஜனாதிபதி பறித்த மூன்று முக்கிய அமைச்சுக்களுக்கு பொ.ஐ.முன்னணியிலிருக்கும் மூவரை பிரதி அமைச்சர்களாக நியமிப்பதற்கான நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

ஜனாதிபதி தனது நிறை வேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து பாதுகாப்பு, உள்துறை, ஊடகத்துறை, ஆகிய அமைச்சுக்களை தம்வசப்படுத்தியிருந்தார்.

இதனால் ஐ.தே.கட்சி அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளை முன்னெடுக்கமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது.இதனை அடுத்து அரசியலில் ஏற்பட்ட நெருக்கடியால் சமா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பணிநிலை வேண்டுகை

யாழ்.மாவட்ட வருவாய்ப் பகுதி ஆளுகையிலுள்ள சந்தைகளுக்கு கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆண்களிடம் இருந்து வேண்டுகைகள் கோரப் படுகின்றன. வேண்டுகையாளரின் தன்வரலாறு (சுயவிபரம்) அடங்கிய விளக் கங்களை 2003.12.08 ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

**பணிநிலைகள்**

01. வரி அறவீட்டாளர்.
02. எழுதுநர்.

**தகைமைகள்**

**பணிநிலை - 01**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை : 18 - 40

**பணிநிலை - 02**

01. க.பொ.த.உயர்தரம் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை : 18 - 40

**வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:**
அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,
வருவாய்ப் பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்,**
நாள்: 2003.12.11
நேரம்: காலை 9.00 மணி
இடம்: வருவாய்ப் பகுதிச் செயலகம்,
யாழ்.சாலை, பளை.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்வுக்கு கடிதம் அனுப்பப்படமாட்டாது.
02. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல்வேண்டும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப்பிரிவு, வருவாய்ப்பகுதி.

(537)

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையின் ஆதரவில்

## மாவீரர் நினைவாக வடமராட்சியில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி!

தமிழீழ விளையாட்டுத்துறையின ரின் - யாழ்மாவட்ட பிரிவின் ஆதர வில், வடமராட்சி உதைபந்தாட்ட லீக், மாவீரர் நினைவாக பாடசாலை மாணவருக்கான மெதுவாக சைக் கிள் ஓடுதல் ,ஏனையோருக்கான மெதுவாக மோட்டார் சைக்கிள் ஓடுதல் போட்டிகள் நெல்லியடியில் நடத்தப்பட்டன.

இவற்றில் பாடசாலை மாண வருக்கான மெதுவான சைக்கிள் ஓட்டப்போட்டியில், நெல்லியடி மத் திய மகாவித்தியாலய மாணவர்க ளான பு.ஜெர்மிலன், நா.சஞ்சீவன் ஆகியோர் முதலாம், இரண்டாம் இடங்களையும் - கரவெட்டி விக்கி னேஸ்வராக் கல்லூரி மாணவனான இ.முரளிதரன் மூன்றாம் இடத்தை யும் பெற்றுள்ளார்.

மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டியில், தேவரையாளி யைச் சேர்ந்த சிவராஜலிங்கம், சுபேந் திரா ஆகியோர் முதலாம், இரண் டாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் மாவீரர் தினத்தன்று பிற்பகல் இரண்டு மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப் பட்டன. (116)

### எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டி மீள ஆரம்பம்

மாவீரர் நாளை முன்னிட்டு கடந்த திங்கள் முதல் இடைநிறுத்தப் பட்ட எல்லைப்படை மாவீரர் ஞாப கார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான தொடர் உதைபந்தாட்டப் போட்டி, இன்றுமுதல் தொடர்ந்து ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி மைதானத்தில் பி.ப.3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறும் போட்டியில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த அண்ணா விளையாட்டுக் கழகம் எதி பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழத் துடன் மோதவுள்ளது. வலிகாமம் லீக்கைச் சேர்ந்த விநாயகர் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத் தித்துறை லீக்கைச் சேர்ந்த நவ சக்தி விளையாட்டுக்கழகம் மோத வுள்ளது.

நாளை வலிகாமம் லீக்கைச் சேர்ந்த றெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ் லீக்கைச் சேர்ந்த சென்.அன்ரனி விளையாட டுக் கழகம் மோதவுள்ளது. வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ் லீக்கைச் சேர்ந்த பொற்பதி விளை யாட்டுக் கழகம் மோதவுள்ளது.

**மலிவு விற்பனை**

மில்க்வைற் சோப் ரூபா 6.00 இற்கு எமது விற்பனை வாகனத்திலும், தொழிற்சாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
**மில்க்வைற்**
த.பெ. இல 77
யாழ்ப்பாணம்
(சி-1762)

**திறைஞ்சனாஸ்** சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
**திருமலை**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
**2 FAST 2 FURIOUS**

**ராஜா** யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
அஜித், மீராஜஸ்மின்
**ஆஞ்சநேயா**
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
1 முதல் 7 வரை
**காதல் அழிவதில்லை**
(சி-1751)

**இப்போது தவறினால் இனி எப்போதும் கிடையாது**

## 4 சில்லு டிரக்டர் ஒன்றை சொந்தமாக்கிக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

குட்வில்

டீசல் லீட்டருக்கு 21 Km
வேகம் மணிக்கு 22 Km



உழவு இயந்திரத்துடன் சுழல்கலப்பையும் - ரூ. 190,000/- மட்டுமே
உழவு இயந்திரத்துடன் இழுவைப்பெட்டி - ரூ. 215,000/- மட்டுமே
(ஹைட்ரோலிக் டிப்பிங் டிரேலர்)

- S195N ரக என்ஜின் - குதிரை வலு 12
- 02 வருட உத்தரவாதம் - எழுத்து மூலமாக
- இலவச சேவை - 6 மாதத்துக்கொரு முறை
- உதிரிப்பாகங்கள் தாராளமாகவும், மலிவாகவும் உள்ளது.
- பல வண்ணங்களில்

குட்வில்

55, துட்டுகெமுனு வீதி, பாமன்கடை, தெஹிவளை.
Tele: 011-2818415.
Mobile: 0777-351376 0777 - 351695.
Fax : 011 - 2818416.

# கொமன்வெல்த் பொதுச் செயலாளர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமர் போட்டியிடுவதற்கு எதிர்ப்பு

பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பதவிக்கு, ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் போட்டியிடவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அடுத்த வாரம் நைஜீரியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் கூட்டத்தில், அந்த அமைப்பின் பொதுச் செயலாளருக்கான தேர்தல் இடம்பெறவுள்ளது.

இந்தப் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரேரித்திருப்பதுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதனை வழிமொழிந்திருக்கின்றார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கதிர்காமர் - தான் பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளராகப் பதவியேற்றால், இலங்கையில் சிறந்த ஒரு சேவகரை இழந்துவிடுவோமென பலர் கருத்துத் தெரிவிப்பதாகக் கூறினார்.

ஆனாலும், எங்கிருந்தாலும் தனது நாட்டுக்கான சேவையைச் செய்வேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுவரை இப்பதவியில் வெள்ளை இனத்தவர்களே இருந்திருப்பதாகவும், ஆசிய அல்லது கறுப்பினத்தவர் ஒருவர் அப்பதவிக்கு வரவேண்டும் என்பதாலேயே, தான் இந்தப் போட்டியில் கலந்து கொள்வதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு உறுதுணையாக இருந்து, சமாதானத்திற்கான போர் என்ற கோஷத்தின் அடிப்படையில், தமிழர்களைக் கொன்று குவித்ததில் முன்னணியில் இருந்தவர் இந்தக் கதிர்காமர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, அவரை இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யக்கூடாதென, பல தமிழர் அமைப்புகளும், பொதுநலவாதிகளும் கேட்டுள்ளனர்.

தென்மராட்சியிலுள்ள சாவகச்சேரியை படையினர் ஆக்கிரமித்தபோது ஏற்பட்ட அழிவிற்கும், பண்டாரவளையில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் இவர் காரணமாக இருந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என சர்வதேச அளவில் பிரசாரம் செய்து, அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் - விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் காரணமாகவும் இவர் இருந்திருக்கின்றார்.

இவ்வாறு தனது வாழ்நாள் முழுவதும் தமிழர்களுக்கு எதிராகவே இவர் செயற்பட்டுள்ளதால், அவரைப் பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளர் பதவிக்குத் தெரிவுசெய்வதைத் தடுக்கும், அனைத்து முயற்சிகளையும் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தற்போதைய செயலாளருக்கு இது தொடர்பாக தமிழர்களை மின்னஞ்சல் அனுப்புமாறும், தமிழர் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

## திருமலையில் தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்வு

திருகோணமலை சோனகதெருவில் அமைந்துள்ள முகைதீன் ஜீம் என்ற முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகில் நடந்த கைக்குண்டுத் தாக்குதலையடுத்து, அந்தப் பகுதியையண்டியிருந்த தமிழ்க் குடும்பங்கள் இடம்பெயர்ந்து வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாதவர்களால் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலையடுத்து, அந்தப்பகுதியில் பதற்ற நிலைமை காணப்படுகிறது.

இதனால், சம்பவ இடத்திற்கு அண்மையில் ஜமாலியாப் பகுதியிலிருந்த தமிழ் மக்கள் - இடம்பெயர்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் அப்பகுதியால் சென்ற பல தமிழர்கள் தாக்கப்பட்டு, படுகாயப்படுத்தப்பட்டனர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறலாம் என்ற நிலையிலெயே இவர்கள் இடம்பெயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10)

## காணமற்போனோர் பாதுகாவலர் சங்கம் செய்தியாளர் மாநாடு நடத்தவுள்ளது!

வடபகுதியில் அரச படையினரால் கைதுசெய்யப்பட்டு, காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர் சங்கம் - தமது நிலைப்பாட்டை விளக்குவதற்காக நாடளாவியரீதியில், செய்தியாளர் மாநாடொன்றை நடத்தவுள்ளது.

பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அன்னையர் முன்னணித் தலைவியின் இல்லத்தில், திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு, தென்னிலங்கை உட்பட நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள ஊடகவியலாளர்களுக்கு பாதுகாவலர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தச் சங்கத்தினால், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படவிருக்கும் மறியற் போராட்டம் குறித்து, அன்றையதினம் கலந்துரையாடப்பட இருப்பதால், சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சுவிஸ் தலைமையகத்தில்

# தேசியத் தலைவரின் பிறந்ததினத்தன்று பொருத்து விளையாட்டு வெளியீட்டு விழா

(பேர்ண்)

சுவிஸ் தமிழ் மாணவர் அமைப்பினர் - தமிழ் உயிரெழுத்துக்களை, தமிழ்கூறும் நல்லுலகிற்கு பயன்படத்தக்கவகையில்,

உலகில் முதன் முதலாக குழந்தைகளுக்கான பொருதது விளையாட்டுக்கேற்ற வகையில், நான்கு வர்ணங்களில் வடிவமைத்து, தமிழீழத் தேசியத்தலைவரின் பிறந்த தினத்தன்று வெளியிட்டு வைத்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் - 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்ற முதுமொழிக்கேற்ப, உயிரெழுத்துக்களை வெளியிட்டு வைக்கிறோம். இவ் உயிரெழுத்துக்கள் - வாழ்வின் அற நெறிகளை வலியுறுத்தி நிற்பவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தொன்மையான எமது மொழி உலகின் பல மொழிகளுள் வேர்விட்டிருப்பது நாம் அறிந்ததே. எனவே, எமது தாய மொழியை புதிய தலைமுறையினரும் ஆர்வமுடன் கற்கும் முகமாக பல வண்ணங்களில் வெளிவந்திருக்கிறது.

ஐ.பி.சி. தமிழ் வானொலியின்- சுவிஸ் கிளையின் ஏற்பாட்டில், பேர்ண் தமிழர் இல்லத்தில் அமைந்துள்ள கலையகத்தில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில்,

குழந்தைகளும், பெரியவர்களுமாகப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், தமிழீழத்திலிருந்து வருகை தந்த - நவம் அறிவுக்கூடப் பொறுப்பாளர் கலைக்கோன் மாஸ்டர் பொருத்து விளையாட்டை வெளியிட்டு வைக்க, மாணவரமைப்பின் செயலாளர் மகிநதன் பெற்றுக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை பொறுப்பாளர் குலமும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். ஐ.பி.சி.கிருஸ்ணா அம்பலவாணர் இந்த நிகழ்வினைச் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.



தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்ததினத்தை முன்னிட்டு சுவிஸ் தமிழ் மாணவர் அமைப்பினால் வெளியிடப்பட்ட பொருத்து விளையாட்டைக் கலைக்கோன் மாஸ்டர் வெளியிட்டுவைக்க, மாணவர் அமைப்பின் செயலாளர் மகிந்தன் பெற்றுக்கொள்வதையும், அருகில் சுவிஸ் பணியகப் பொறுப்பாளர் குலம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# மீள்குடியமர்ந்த மக்களுக்கு ஜேர்மன் அரசாங்கம் உதவி

வவுனியா மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு, அவர்களது அத்தியாவசியத் தேவைகளை நிறைவுசெய்ய, ஜேர்மன் அரசு நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

ஜேர்மன் அரசினால், மீளக்குடியமர்ந்த 62 கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு, 226 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் - இலங்கை அரசிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து, சுமார் 3700 குடும்பங்களைச் சேர்ந்தோர் வவுனியாவில் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

# மாணவர்களுக்கான சீருடைத்துணி வழங்குவதற்கு தாமதம் ஏற்படுமாம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

காபூல் லங்கா துணிவழங்கும் நிறுவனத்துடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, இந்தவருடம் மாணவர்களுக்கு வழங்கவிருந்த இலவச சீருடைத்துணி விநியோகத்தில், தாமதம் ஏற்படுமென கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ஐம்பது வீதமான சீருடைத்துணிகள் காபூல் லங்கா நிறுவனத்திடமிருந்தே கொள்வனவு செய்யப்பட்டது. இந்தத் துணிகள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. ஆனால், இந்த வருடம் காபூல் லங்கா நிறுவனத்துடன் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக, அரசாங்கம் மாணவர்களுக்குத் தேவையான சகல சீருடைகளையும் சீனாவிலிருந்து கொள்வனவு செய்யவுள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சு மேலும் தெரிவிக்கையில் -

தேவையான சீருடைத்துணிகள் முழுவதையும் இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எப்படியோ பாடசாலை முதலாந்தவணை தொடங்குவதற்குள் மாணவர்களுக்கான சீருடைத்துணி வழங்கப்பட்டுவிடுமெனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, பாடசாலை விடுமுறைதினம் நேற்று ஆரம்பமாகியது. முதலாந்தவணை அடுத்தவருடம் ஜனவரி மாதம் ஐந்தாம் திகதி பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சீன அரசியல் ஆலோசனைக்குழு பிரதமர் ரணிலைச் சந்தித்துள்ளது

(கொழும்பு)

இலங்கைப் பிரதமரைச் சீன மக்களின் அரசியல் ஆலோசனைக் குழு சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இலங்கையின் சமாதான முயற்சிகளை வரவேற்றுள்ள இந்தக் குழு- இலங்கையின் ஒருமைப்பாட்டையும், அரசியல் ஸ்திரத்தன்மையையும் பேணுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் குறித்தும் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ள இந்தக் குழு- இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு, இரு பிரதான அரசியல்கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், இருதரப்பினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

# திருகோணமலை சம்பவங்களுக்கு மூன்றாந்தரப்பே காரணமாகும்!

## உள்துறை அமைச்சு கூறுகிறது

(வவுனியா)

திருகோணமலை - கிண்ணியா பகுதியில் அண்மையில் - தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே நடைபெற்ற வன்முறைகளுக்குப் பின்னால், மூன்றாம் தரப்பு ஒன்று ஈடுபட்டு இருந்ததாக, உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், பொலிஸாரின் அறிக்கைமூலம் மூன்றாம் தரப்பு ஒன்றே இந்தச் சம்பவங்களுக்குப் பின்னால் நின்றது என்பது புலனாகின்றது.

இதனமூலம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையே குழப்பத்தை உருவாக்கும் முயற்சி நடந்தது.

அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு - பொலிஸார் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். மக்களை ஆத்திரமூட்டும் செயல்கள் எதிலும் ஈடுபட வேண்டாமெனவும், சகல சமூகங்களுக்கிடையில் நல்லுறவையும், கௌரவத்தையும் பேணிப்பாதுகாக்குமாறும் தெரிவித்துள்ளனர். அத்துடன், இப்பகுதியில் பொலிஸார் கலகம் ஏதும் ஏற்படாத வகையில், பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை - அண்மையில் சம்பவம் நடைபெற்ற கிண்ணியா, குபன்நகர், கச்சைக்கொடிதீவு மற்றும் மூர் வீதி ஆகிய இடங்களில், பொலிஸாரால் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# தபால்சேவை தொடர்பான பிரச்சினைகளை யாழ்.பிரதம தபாலகத்தில் தெரிவிக்கலாம்

## யாழ்.பிரதம தபாலதிபர் எஸ்.இராசதுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தபால் சேவை சம்பந்தமான எந்தவொரு பிரச்சினைகளையும், எம்மிடம் வந்து தெரிவிப்பதாலேயே மக்கள் தமது சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என - யாழ்.பிரதம தபாலதிபர் எஸ்.இராசதுரை தெரிவித்துள்ளார்.

தபால் சேவை தொடர்பாக மக்கள் சில பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகச் செய்திகள் வெளியாவது தொடர்பாகக் கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

தபாற் சேவைகள் தற்போது சீரானமுறையில் நடந்துகொண்டிருக்கின்றன. வீடியோ கசற்றுகள், புத்தகங்கள் மற்றும் பல்வேறு பொருடகளும் உள்ளூர் - வெளியூர் தபால் சேவையின் மூலம், எம்மால் மக்களிடமிருந்து பெறப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

பாதை திறப்பதற்கு முன்னிருந்ததிலும் பார்க்க எவ்வளவோ சிறப்பானமுறையில், சீரானமுறையில் முத்திரைகளும் விநியோகிக்கப்படுகின்றன.

எம்மிடம் ஊழியர் பற்றாக்குறை என்னும் பிரச்சினை நீண்டகாலமாகவே இருந்து வருகின்றது. எனினும் - எமது சேவை இயன்றளவு விரைவாகவும் சிறப்பாகவுமே இடம்பெற்றுவருகின்றது.

எமது சேவையில் ஏதேனும் தவறுகள் இடம்பெற்றிருந்தால் அல்லது யாருக்காவது எமது சேவையால் ஏதேனும் சிரமங்கள் ஏற்பட்டிருந்தால, அது தொடர்பாக எம்மிடம் முறையிட்டால், அதற்கான சரியான பரிகாரத்தினை நாம் பெற்றுக்கொடுப்போம்.

அதனைவிடுத்து - மக்கள் வேறு எங்கேனும் சென்று முறைப்பாடுகள் செய்வதால், எந்தப்பயனும் கிட்டாது. ஏனெனில், எந்தவொரு பதிவுத்தபால் தொடர்பான விடயங்களையும் சரியானமுறையில் கண்காணித்து வருகின்றோம்.

இதில் பாதிப்பேதும் இருந்தால் எமக்குத் தெரிவிக்கப்பட்டாலேயே அது தொடர்பாக நாம் ஆராயமுடியும்.

பதிவுத்தபாலில் அனுப்பப்படும் எந்தவொரு பொருள், கடிதம் முதலானவற்றிற்கு நாம் பொறுப்புச் சொல்லவேண்டிய கடப்பாடு இருப்பதால், அவற்றை உரியவர்களிடம் சேர்ப்பிக்கும் பணியை மிகவும் சரியான முறையில் செய்கின்றோம் என்றார்.

# மாவீரர் தினத்தில் பிறந்துள்ள 20 குழந்தைகளுக்கு சேமிப்பு கணக்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நவம்பர் 27ம் நாள் பிறந்த 200 குழந்தைகளுக்கு 'தளிர்' சிறுவர் சேமிப்புக்கணக்கினை வங்கி சார்பாக ஆரம்பித்து வைத்துள்ளன.

இந்தவகையில், வங்கியின் முல்லைத்தீவு கிளையினால் மூன்று ஆண் குழந்தைகளுக்கும், ஒரு பெண் குழந்தைக்கும், கிளிநொச்சி கிளையில், நான்கு ஆண் குழந்தைக்கும் இரண்டு பெண்குழந்தைக்கும், வவுனியாக் கிளையில் இரண்டுஆண் குழந்தைக்கும், ஒரு பெண் குழந்தைக்கும், மன்னார் கிளையில் ஒரு பெண் குழந்தைக்கும் சிறுவர் சேமிப்புக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் அருகில் உள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என வங்கியின் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

## தொழில்நுட்பக் கல்லூரியில் 500 சான்றிதழ்கள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் 500 சான்றிதழ்கள் தேங்கியுள்ளதால் அவற்றை உரியவர்கள் வந்து, பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரியின் பதிவாளர் கேட்டுள்ளார்.

கடந்த 2001 ஆம் ஆண்டிற்குரிய பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்து அவற்றில் சித்தியெய்தியவர்களுக்கான சான்றிதழ் முதல் அதற்கு முந்திய காலங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியெய்தியோர் உட்பட ஐநூறுக்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் தேங்கியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட - ஐந்து பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மானிப்பாய் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை, மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை, இளவாலை றோ.க.த.க.பாடசாலை, சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளிலேயே அதிபர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில்- முதலிரு பாடசாலைகளுக்கும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், ஏனைய மூன்று பாடசாலைகளுக்கும் இலங்கை அதிபர் சேவை மற்றும் ஆசிரியசேவையில் வகுப்பு 1, வகுப்பு 2.1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவி வெற்றிடம் தொடர்பான மாதிரி விண்ணப்பப்படிவத்தினை, வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிடமுடியுமெனவும், விண்ணப்பங்கள் யாவும் டிசம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னதாக வந்து சேரவேண்டுமெனவும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெயினா இருதயநாதன் தெரிவித்துள்ளார்.

## பாதீனியத்தைக் கட்டுப்படுத்த களைநாசினி விநியோகம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினைப் பிரதேசத்தில் பெருகியுள்ள பாதீனியம் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, விவசாயத்திணைக்களத்தால் இப்பிரதேச விவசாய சம்மேளனத்திடம் - களைநாசினி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் களைநாசினி இன்று காலை தெளிக்கப்படவுள்ளதாகவும் சம்மேளனச் செயலாளர் க.அரசரத்தினம் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பிரதேசத்தில் பெருகியுள்ள பாதீனியம் களைகளை- சிரமதான அடிப்படையில் பிடுங்கி அழிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை, மக்கள்முன்வராமையால் கைவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (83)

# மாணவர் பேரவை மீதான தாக்குதல் அடுத்தமாதம் 5 ஆம் திகதி விசாரணை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்தோர் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் தாக்கப்பட்டது தொடர்பான விசாரணைகள் - அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தினுள் அனுமதி இன்றி உட்புகுந்து, அங்கிருந்தோரைத் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தியதாகவும், அங்கிருந்த பெறுமதிவாய்ந்த பொருட்களை நாசம் செய்ததாகவும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் சர்வதேச மாணவர் பேரவையினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து -

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி. விசாரணைக்கு திகதி குறித்து, கடிதம் அனுப்பப்பட்டபோதிலும், யாழ். பொலிஸ் நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரி விடுமுறையில் வீடு சென்றிருப்பதனால், விசாரணைகளை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு பிற்போடுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, விசாரணைகள் அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என, யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

# கத்தோலிக்க இளையோர் பிரதிநிதிகளின் முப்பதாவது தேசிய ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழப்பாணம்)

நாட்டிலுள்ள அனைத்து மறைமாவட்டங்களிலிருந்து வந்த கத்தோலிக்க இளையோர் பிரதிநிதிகள், தமது முப்பதாவது தேசிய ஒன்றுகூடலை யாழ். மறைக்கல்வி நிலையம், யாழ். அகவொளி நிலையத்தில் நடாத்தி வருகின்றது.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய இந்த நிகழ்வு - இன்றும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுகளில் - தேசிய இயக்குநர் அருட்தந்தை மேரியஸ் பெர்ணான்டோ கலந்து கொள்ளவுள்ளார்.. அத்துடன், யாழ்.மறைமாவட்ட ஆயர் அருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வுக்கான ஒழுங்குகளை, யாழ்.இளையோர் ஆணைக் குழுவின் இயக்குநர் அருட்தந்தை சாள்ஸ் கொலின் அடிகளார் மேற்கொண்டு வரும் அதேவேளை, இந்த நிகழ்வில் எண்பதிற்கும் அதிகமான இளையோரின் பிரதிநிதிகள் கலந்துகொண்டுள்ளனர். (119)

# சின்னஞ்சிறு செய்திகள்

## குட்டியபுலப் பகுதியில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(யாழப்பாணம்)

குட்டியபுலம் பகுதியில் அண்மைக்காலமாக கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல மாதங்களாக இப்பிரதேச இளைஞர்களால் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் - மீண்டும இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இரவு வேளையில் அயல் கிராமங்களுக்கு, விற்பனைக்காக மோட்டார் சைக்கிள்களில் எடுத்துச் செல்லப்படுவதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன், கசிப்பு உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபடுபவர்கள் கையடக்கத் தொலைபேசியினை உபயோகித்து கசிப்பு ஒழிப்புக் குழுவினரிடம் சிக்காது தப்பிக் கொள்வதாகவும், கடந்த காலங்களில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றப்பணம் கட்டியவர்களே இச்செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்.

இதேவேளை, ஊரெழு -பொக்கணைப் பகுதியிலுள்ள பற்றைக்காணிக்குள் அமைந்திருந்த பாரிய கசிப்புக்குகை ஒன்றை அண்மையில் பொலிஸார் முற்றுகையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (83)

## சுகாதாரத் தொண்டர்களுக்கான செயற்திட்ட கருத்தமர்வு

சுகாதாரத் தொண்டர்கள், கிராமிய சுகாதார உதவியாளர்களுக்கான நான்கு செயற்திட்டக் கருத்தமர்வுகள் இடம்பெறவுள்ளன. யுனிசெப் நிறுவன அனுசரணையுடன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில், நாளை தொடக்கம் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை இக்கருத்தமர்வுகள் இடம்பெறவுள்ளன.

குறிப்பிட்ட துறைசார்ந்த பயிற்றுனர்களால், விரிவுரைகளும் கருத்துப் பகிர்வுகளும் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட தொண்டர்களில், அண்மையில் இடம்பெற்ற கருத்தமர்வில் பங்குகொள்ளாத 15 சுகாதாரத் தொண்டர்களும், 7 கிராமிய சுகாதார உதவியாளர்களும் பங்கு கொள்ளவுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.(91)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர் சங்கத்தினரின் மாதாந்த பொதுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சங்கத்தலைவர் ந.கனகலிங்கம் தலைமையில் நீர்வேலி கந்தசாமி கோயில் சனசமூக நிலையத்தில் இக்கூட்டம் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் தொழில் பாதிப்பு விடயம் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது. (ச)

## ஆன்மீகப் பணி நயப்பு விழா

சிவத்ததமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் - ஆன்மீகப் பணி நயப்பு விழா இன்று நடைபெறவுள்ளது. நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில், அமைச்சர் மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் கலந்து கொள்ளவுள்ளார். மாலை 3 மணிககு காரை எம்.பி.அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் சமய, சமூக, கல்வித் துறை சார்ந்த பல அறிஞர்கள் உரையாற்றவுள்ளனர்.

முன்னதாக நல்லூர் ஆலய வாசலிலிருந்து, விழா நடைபெறும் மண்டபத்திற்கு சிவமகாலிங்கம் தம்பதியினர் ஊர்வலமாக அழைத்து வரப்படவுள்ளனர். (ச)

## மூக்குக் கண்ணாடி கண்டெடுப்பு

கஸ்தூரியார் வீதியிலுள்ள லிங்கம் கூல்பாருக்கு முன்னால் இருந்து மூக்குக் கண்ணாடியொன்று கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## எயிட்ஸ் தினம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் - சர்வதேச எயிட்ஸ் தினம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர் : பா.பானுலக்ஷன்
முகவரி : நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.



மூன்றாவது அகவையில்



பெயர் : யோ.பிரணவன்
முகவரி : கோண்டாவில், தில்லையம்பதி.

மூன்றாவது அகவையில்

பெயர் : த.டிலக்ஷா,
முகவரி : பருத்தித்துறை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



# விளையாட்டு அரங்கம்



எதிர்வீரசிங்கம்

## ஆளுமையின் மறுவடிவம்

# ஒரு மனிதனைச் சந்தித்தோம்

நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்ற பெயர் எங்கள் யாவருக்கும் அறிமுகப்படுத்தப்பட வேண்டியதொரு பெயரல்ல. ஆசியப் போட்டிகளில் - உயரம் பாய்தலில் பதக்கம் வென்றவர் என்ற பெருமையைப் பெற்றவர் • என்றவகையில், அறியப்பட்ட இவரின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் ஒரு சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. இவருடன் உரையாடியபோது, பேட்டி காண்கிறோம் அல்லது ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுகிறோம் என்ற உணர்வைவிட, ஒரு ஆசானின் முன் அமர்ந்திருக்கும் மாணவனின் மனநிலையே காணப்பட்டது என்பதே உண்மை.

தனது மிகச்சிறிய வயதில் ஒன்பது வயதுவரை பெரியவிளானில் கல்விகற்ற இவர் - மூன்றாம் வகுப்பில் யாழ். மத்திய கல்லூரியில் சேர்ந்து கொள்கிறார். **H.S.C** 1 ஆம் வருடம்வரை (தற்போதைய க.பொ.த உ/த 1 ஆம் வருடம்) யாழ்.மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். **H.S.C** இரண்டாம் வருடத்தை கொழும்பு சென்.ஜோசப் கல்லூரியில் கற்றவர். இதற்கு முன்னதாக யாழ். மத்திய கல்லூரியில் **S.S.C** (தற்போதைய க.பொ.த சா/த). 1952 இல் ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இவர் கலந்துகொண்டவர் என்பது வியப்பானதொரு செய்தி.

ஒலிம்பிக்போட்டி ஒன்றில் முதல் ஆறு இடங்களைப் பெற்றவர்களே அடுத்த ஒலிம்பிக்போட்டிக்குத் தகுதிபெறுவர் என்ற அடிப்படையில் இவர் ஹெல்சிங்கி ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதிபெற்றிருந்தார். அப்போது இவர் தாண்டிய உயரம் 6 அடி 2 அங்குலங்கள்.


இவர் இந்த மாபெரும் சந்தர்ப்பத்தைப்பெறக் காரணமாக அமைந்தது - தனது 16 வயதில் தேசிய தடகள விளையாட்டுப் போட்டிகளில் இவர் புரிந்த சாதனையே ஆகும். 1951 இல் 6 அடி 2 அங்குலங்கள் பாய்ந்த இவர் - ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதி அடிப்படையில் தெரிவானார். அதற்கு இரண்டு வருடம் கழித்து, தனது பதினெட்டாவது வயதில் மீண்டும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 6 அடி 3 அங்குலங்கள் பாய்ந்து சாம்பியன் பட்டம் வென்றார். தனது இருபதாவது வயதில் பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைநகர் மணிலாவில் நடைபெற்ற ஆசியப் போட்டிகளில், 6 அடி 5 அங்குலங்களைப் பூர்த்திசெய்கிறார். இதில் ஒரு விசேடம் என்னவென்றால், முதல் நான்கு இடங்கள் பெற்றவர்கள் பூர்த்தி செய்தது - 6 அடி 5 அங்குலங்களே. ஆனால் **KNOCKS** எண்ணப்பட்ட அடிப்படையில் இவர் நான்காம் இடத்தைப்பெற முதல் மூன்று இடங்களையும் இந்தியாவின் அஜித்சிஸ், யப்பான் நாட்டின் இஸிகாவா, மற்றும் ஒரு பிலிப்பைன்ஸ் நாட்டவர் தட்டிக்கொண்டார்கள் என்று ஞாபகமாகக் கூறுகின்றார்.

இவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, இடையிடையே மிகச் சுவையான செய்திகளையும் அறிந்துகொள்ளமுடிந்தது. 1951 இல் தேசியத் தடகளப்போட்டிகளில் (AAA) இவர்தெரிவு செய்து கொண்ட நிகழ்வுகள் - உயரம் பாய்தல் மற்றும் தடை தாண்டல் ஓட்டம். முதலாவது தகுதிகாண் ஓட்டத்தில் இவருடன் ஓடிய ஒரு வீரர் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவன். இவர் மூன்றாவது இடம்பெற, பட்டதாரி மாணவன் முதலிடம் பெற்றார். பின்னர் தடைதாண்டல் இறுதி நிகழ்விலும் பட்டதாரி மாணவனே முதலிடம் பெற்றார். அவர் வேறுயாருமல்ல லக்ஸ்மன் கதிர்காமர்தான் என்கிறார் சிரிப்புடன்.

மணிலா ஆசியப்போட்டிகள் முடிவடைந்த பின் இவரது விளையாட்டுத்துறைத் திறமைக்கு இன்னொரு அத்திவாரம் கிடைத்தது.

1956 ஆம் வருடம் விளையாட்டுத்துறையில் புலமைப்பரிசில் பெற்ற எதிர்வீரசிங்கம் ஐயா, தனது இருபத்திரண்டாவது வயதில் ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னிய பல்கலைக்கழகத்தில் (லொஸ்ஏஞ்சலிஸ் நகரம்) மாணவனாகச் சேர்ந்து கொள்கிறார். இதில் என்ன வேடிக்கை என்றால், 1958 ரோக்கியோ யப்பான் போட்டிகளில் இலங்கையின் சார்பாக அவர் தெரிவு செய்யப்படவில்லை என்பது தான். இது வேடிக்கையா, வேதனையா என்று அவருடன் உரையாடிய எங்களுக்குப் புரியவில்லை.

இந்தக் கட்டத்தில் ருசிகரமான செய்தியொன்றுண்டு. இவரது தெரிவு தவிர்ப்பு சிங்கள இனத்தைச் சேர்ந்த பத்திரிகையாளரான கார்ல்ரன் செனவிரத்ன என்பவருக்கு படு ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டது. கொழும்புப் பத்திரிகையில் இவர் கிழித்த கிழிப்பில் எதிர்வீரசிங்கம் ஐயா அணியில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார். ஆனால் லொஸ்ஏஞ்சலிஸிருந்து ரோக்கியோவிற்கும், பின் அங்கிருந்து லொஸ்ஏஞ்சலிஸ"க்கும் திரும்பிவிடும் செலவை இவரே ஏற்கவேண்டியநிலை. ( இது அப்போதைய அரசின் இன்னொரு லீலை). இன்னொரு கடினமானகட்டத்தை எப்படித்தாண்டுவது என்று எதிர்வீரசிங்கம் ஐயா தடுமாறியபோது, இவரது உதவிக்கு இலங்கையில் இருந்து ஒரு கரம் நீண்டது. அதுதான் டெனோவன் அன்ரீ என்பவரின் கரம். இவர் அவரைக் கண்டதில்லை, அவரும் இவரைக் கண்டதில்லை. ஆனால், ஐயாயிரம் மைல்களுக்கு அப்பால் ஒரு இளைஞனின் மனம் நொருங்கியதை டெனோபன் அன்ரீ உய்த்துணர்ந்தாரோ என்னவோ, லொஸ்ஏஞ்சல்ஸில் - ரோக்கியோ இருவழிப் பயணத்திற்கான ரிக்கெட் இவரின் கையில் கிடைக்க - டெனோபன் அன்ரீ தனது சொந்தப் பணத்தை செலவிட்டு முழுக்காரணமாக இருந்திருக்கிறார்.



என்றும் உயர்ந்த மனிதன்

இந்த விடயம் பற்றி எதிர்வீரசிங்கம் ஐயா கூறும்போது - ரோக்கியோ உயரம் பாய்தல் தங்கப்பதக்கச் சாதனைக்கு எல்லோரும் என்னைப் புகழ்கிறார்கள், உண்மை அதுவல்ல. இன்றுகூட நான் மனப்பூர்வமாகச் சொல்வது என்னவென்றால் - இந்தப் புகழ் எலலாம் பத்திரிகையாளர் கால்ரன் செனவிரத்னவிற்கும், டெனோபன் அன்ரீ அவர்களுக்குமே சேரவேண்டும். அவர்கள் இல்லாவிட்டால் அங்கு என்பெயரே இல்லாமல் அல்லவா இருந்திருக்கும் என்கிறார்.

எதிர்வீரசிங்கம் ஐயாவின் பல்கலைக்கழக காலத்திலும் தன் பதிவை ஏற்படுத்த அவர் தவறவில்லை. 1956 - 1960 காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள் சார்ந்த போட்டிகளை இவர் விட்டுவைக்கவில்லை. பசுபிக் கரையோரப் பல்கலைக்கழக **CONFERENCE MEET** போட்டிகளில் (பத்துப் பல்கலைகழகங்கள் கலந்துகொள்ளும் போட்டிகளில்) இவர் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். அடுத்து அமெரிக்க தேசிய பல்கலைக்கழகச் சம்பியன் ஷிப் போட்டிகளில் ஆறாவது இடமும், தேசிய திறந்த தடகளப் போட்டிகளில் ஆறாவது இடமும் பெற்றிருக்கிறார்.

(தொடரும்)

# சோதனைக் களம்

பெரிதும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த இலங்கையின் டெஸ்ட் அணியில் விளையாடும் சந்தர்ப்பம் பெறும் பதினைந்து பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி - காலி கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பிக்கும்போது, புதுமுகம் டினுஷா பெர்னான்டோ, சமிந்த வாசுடன் இணையாகப் பந்துவீசக்கூடும். முன்னதாக இங்கிலாந்துடனான ஒருநாள் போட்டியில், முதன்முதலாக விளையாடி இரண்டு விக்கெட்டுக்களை பதின்மூன்று ஓட்டங்களுக்குச் சரித்திருந்தார். காலி மைதானத்தின் தன்மை பொறுத்து, இரண்டு வேகப்பந்துவீச்சாளர்களையே உள்ளடக்கமுடியும் என்ற நிலையில், வாஸ்போ இன்னொருவர் டினுஷவா அல்லது டில்ஹாரவா என்பதே இப்போதைய கேள்வி.

இதேவேளை - சுழல் பந்துவீச்சாளர்கள் மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். முத்தையா முரளிதரன், குமார் தர்மசேன, உபுல்சந்தன ஆகியோரே அந்தமூவர். இந்த வகையில், இவர்கள் மூவரும் விளையாடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. றொமேஷ் களுவிதாரண உள்ளடக்கப்பட்டாலும், சங்கக்காரவும் இடம்பெறும் நிலையில், சங்கக்கார விக்கெட்காப்புச்செய்தால் றொமேஷின் இடம் சந்தேகத்துக்கு இடமானது என்று கூறப்படுகிறது. மத்திய வரிசையிலும் போட்டியொன்றுண்டு. ஒன்றில் திலகரட்ண டில்ஷான் அல்லது திலான் சமரவீர விளையாடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளூர் போட்டிகளின் துடுப்பாட்டச் சராசரிகளின்படி திலான் சமரவீரவின் கை ஓங்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஹசான் திலகரட்ணவின் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த டெஸ்ட்போட்டியில், மாவன் அத்தப்பத்து உபதலைவராக இருப்பார். அறிவிக்கப்பட்டுள்ள பதினைந்து வீரர்களின் பெயர்கள்.

ஹசான் திலகரண்ட, மாவன் அத்தப்பத்து, சனத் ஜயசூரிய, குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்த்தன, திலான் சமரவீர, குமார் தர்மசேன, உபுல்சந்தன, சமிந்த வாஸ், டினுஷ பெர்னாண்டோ, முத்தையா முரளிதரன், டில்ஹாரா பெர்னாண்டோ, திலகரட்ண டில்ஷான், றொமேஷ் களுவிதாரண, மைக்கல் வன்டோர்ட்-



சனத் ஜயசூரிய

உன்னால் முடியும் தம்பி, தம்பி

-ரட்ணா -

## கலந்துரையாடல்
## ஜோசப்கிருஸ்ணா - விக்கி

# நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்

நடக்கக் கூடாது என்று எதிர்பார்த்தாலும், அதுவே நடந்துவிட்டது. கேத்தாரமா கிரிக்கெட் மைதானம் மழையால் நனைய, இரண்டு இறுதி ஒருநாள் போட்டிகளும் நீரில் மூழ்கிவிட்டன. இதில் மிகுந்த எரிச்சல் அடைந்தவர்கள் ரசிகர்கள்தான். இந்த நிலையில் இந்த இரண்டு ஆட்டங்களையும் காண்பதற்கு, ஆர்வத்துடன் ரிக்கெட் வாங்கியவர்களுக்கு இன்னொரு எரிச்சலூட்டும் செய்தி. தற்செயலாக மழைபெய்ததால் இந்த ஒருநாள் போட்டிகள் தொடர்பில் எடுக்கவேண்டிய நடைமுறைகள் பற்றி இலங்கைக் கிரிக்கெட் சபையும் (SLC), இங்கிலாந்து கிரிக்கெட்சபையும் (ECB) தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளாமல்விட்டதுதான் இரட்டை எரிச்சல். அதாவது ஆட்டத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் இழந்த ரசிகர்கள், கொடுத்த பணத்தைத்தான் பெறலாம் என்றால் பணம் திருப்பி வழங்கப்படமாட்டாது என்பதே அந்த இரண்டாவது எரிச்சல்.

இலங்கைக் கிரிக்கெட் சபையின் கருத்துப்படி ஒரு ஆட்டம் தடைப்பட்டால், மீண்டும் அது புதிதாக நடாத்தப்படவேண்டும் ஆனால், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் கருத்துப்படி அப்படியல்ல ஆட்டம் கைவிடப்பட்ட இடத்தில் இருந்து மீண்டும் நடைபெற்று முடிவடைய வேண்டும் என்பதாகும். இந்த வகையில் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர் கருத்துக்கூறும்போது, 100 ஓவர்கள் கொண்ட ஒரு போட்டியில் 90 ஓவர்கள் நிறைவுபெற்ற நிலையில் ஒரு பத்து ஓவருக்காக நாள் முழுவதும் திட்டமிடுவது அபத்தம் என்கிறார்கள். இங்கிலாந்து கிரிக்கெட் சபையோ, மீளவும் முழு ஆட்டத்தையும் வீரர்கள் மீது திணிப்பது அவர்களுக்கு பெரும்சுமையாகும் என்று இங்கிலாந்தின் அணித்தலைவர் மைக்கல் வோனும் வலியுறுத்துகிறார்.



கிரகம்தோர்ப், டிரெஸ்கொதிக்

காலநிலையை புரிஞ்சுக்கோன்னு சொல்லியிருக்கிறாங்க பார்த்தியா

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் நிரம்ப கிரிக்கெட்ரசிகர்கள் இங்கிலாந்தில் இருந்து வந்தவர்கள். ஆனால், அவர்களுக்கு ஆட்டத்தை பார்க்கும் சந்தர்ப்பமும் இல்லை. ரிக்கெட்டுக்குக் கொடுத்த பணமும் இல்லை என்றால் எப்படி இருக்கும். அவர்கள் தங்கள் ஹோட்டல்களுக்கே திரும்பிச் சென்றுவிட்டார்கள் (இந்தக • பயணத்துக்காக எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள் ஆங்கிலேயர்கள்). காலநிலை சாதகம் இல்லாத ஒரு காலப்பகுதியில் இந்த ஆட்டங்கள் நடத்தத்தீர்மானித்தவர்கள் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். இதேவேளை, அடுத்த வருடம் அவுஸ்திரேலியா, இலங்கை வரும்போது அந்த ஆட்டங்களுக்குரிய ரிக்கெட்டின் பெறுமதியில் 50% மட்டுமே அறவிடப்படும் என்கிறார்கள் கிரிக்கெட் அதிகாரிகள். எனவே ரிக்கெட்டுக்களைக் கவனமாகப்பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள் என்று இலவசமான ஆலோசனையொன்றையும் வழங்கியுள்ளார்கள்.

(தீபக்)

# மறக்கமுடியவில்லை

சென்றவாரம் இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜவகல் சிறிநாத்தினுடைய ஓய்வினைத் தாங்கமுடியாத கிரிக்கட் ரசிகர்களுக்கு, இவ்வாரம் அவுஸ்திரேலிய அணியின் நட்சத்திர ஆட்டக்காரராகிய ஸ்ரீவ்வோவ்வினுடைய ஓய்வு அறிவிப்பு மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய விடயமாகத் தான் இருக்கின்றது. அவுஸ்திரேலிய அணியினர் 1996 ஆம் ஆண்டு மார்க் ரெயிலருடைய தலைமையின்கீழ், வில்ஸ் உலகக் கோப்பையினை இலங்கை அணியினருக்குத் தாரைவார்த்துக் கொடுத்த போது டெயிலரின் தலைமைக்கு சாவு மணி அடிக்கப்பட்டு, அடுத்த தலைவர் ஸ்ரீவ்வோவ்தான் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டது. மார்க் வோவ் மற்றும் ஸ்ரீவவோவ். சகோதரர்கள் அவுஸ்திரேலிய அணியின் தூண்களாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது. 1965.ஜூன் 2ஆம் திகதி பிறந்தவர் ஸ்ரீவ்வோவ. இவர் 1985 ஆம் ஆணடு முதன் முதலாக டிசம்பர் மாதம் டெஸ்ட் போட்டியில் ஆடினார். மொத்தமாக 164 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருக்கின்றார். 10,660 ஓட்டங்களைப் பெற்றிருக்கின்ற இவர், 32 நூறு ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றார். அவருடைய அதிகூடிய ஓட்டங்கள 200 ஆகும். ஓட்டச்சராசரி 51.25. அவுஸ்திரேலிய அணி இரண்டாகப் பிரிக்கப்பட்டு டெஸ்ட் அணி, ஒரு நாள் அணி என்று பிரிக்கப்பட்ட பொழுது, டெஸ்ட் அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் ஸ்ரீவ்வோவ். இந்திய அணியுடனேயே முதல் டெஸ்ட் போட்டியில் இவர் அறிமுகமானார். அப்போது இவருக்கு வயது 20. 1997 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கெதிரான போட்டியில், ட்ரன்ட் பிறிட்ஸ் மைதானத்தில் வைத்து முதல், இரண்டாம் இன்னிங்ஸ் ஆகியவற்றில் நூறு ஓட்டங்களைப் பெற்றார். இவர் ஆரம்பத்தில் நியூசவுத்வேல்ஸ் அணிக்காக ஆடியவர். மார்க் ஸ்ரீவ் சகோதரர்களுடைய இணைப்பு ஆட்டம்தான், அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றிருக்கின்றது. நியூசவுத்வேல்ஸ் அணிகள். 1999 ஆம் ஆண்டு டெஸ்ட் அணித்தலைவராக ஸ்ரீவ்வோவ் நியமிக்கப்பட்டார். ஆனால், இவருடைய ஒருநாள் போட்டித்தலைமையில்தான் 1999 ஆம்ஆண்டு உலகக் கோப்பையை அவுஸ்திரேலிய அணி வெற்றிகொண்டது. இவருடைய முதலாவது ஆஷஸ் டெஸ்ட்போட்டியில் 2001 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியை 4-1 என்ற ரீதியில் படுதோல்விகாணச் செய்து, தொடரைக் கைப்பற்றினார். அதேவேளை, டெஸ்ட் ஆட்டங்களில் பெயர்போன மேற்கிந்தியத்தீவுகள் அணியை 5-0 என்றரீதியில் அவுஸ்ரேலிய அணி 2000 -2001 இல் படுதோல்வியடையச் செய்தபோது, அணித்தலைவர் ஸ்ரீவ்வோவ்தான் இவருடைய அணித்தலைமையில் தொடர்ச்சியாக 16 டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருக்கின்றது. ஆனால் ரிக்கிபொண்டிங் 2001 ஆம் ஆண்டு சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றபிறகு, ஸ்ரீவ்வோவ் அவ்வளவாக ஆடவில்லை என்றேகூறவேண்டும். 2002 - 2003 ஆஷஸ் தொடரில், சேர்டொன்பிரட்மனுடைய 29 டெஸ்ட் நூறு ஓட்டங்களைச் சமன்செய்த பெருமை இவருக்குரியது. உலகிலேயே 10,000 டெஸ்ட் ஓட்டங்களைக் கடந்த 3 ஆவது டெஸ்ஆட்டக்காரராக ஸ்வவோ இருக்கின்றார். இவர் ஒரு சிறந்த டெஸ்ட் ஆட்டக்காரர் மட்டுமல்ல, அத்துடன் ஒரு சிறந்த, ஒரு நல்ல ஓட்டக் காரராகிய இவரை கடந்த சில வருடங்கள் அவுஸ்திரேலிய அணித்தெரிவாளர்கள் சரியாக மதிக்கவில்லை என்றே நினைக்கத் தோன்றுகின்றது. ஆனால், ஸ்ரீவ்வோவ் தனது ஓய்வினை இந்திய அணியுடனான டெஸ்ட் போட்டித் தொடரின் முடிவில்தான் அறிவிப்பார் என்றதகவல், இந்திய அணியினரின் வயிற்றில் புளியைக் கரைக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. தனது டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் சகாப்தத்தில் இறுதிப்போட்டியில் இந்திய அணியினை ஒருவாங்கு வாங்குவார் என்று நம்பலாம். இவர் மொத்தமாக 91 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருக்கின்றார். 109 பிடிகளை எடுத்திருக்கின்றார். ஒரு சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர் ஓய்வுபெறப்போகிறார் என்பது மிகவும் கவலைக்குரிய விடயம்தான். இவருக்கு பெருமளவு ரசிகர்கள் இந்தியாவில்தான் இருக்கின்றார்கள். இவருடைய காதலி ஒரு இந்தியப் பெண். அவருடைய பெயர் ரியர்ப்பிற்றே. இந்தியாவிலிருக்கின்ற புற்றுநோய் வைத்தியசாலைக்கு இவர் அடிக்கடி விஜயம் செய்து, பல உதவிகளைச் செய்து வருவது இவரது மனிதாபிமானப் பணிகளுக்கு ஒரு உதாரணம். கடந்த வாரம் ஒரு அற்புதமான பந்து வீச்சாளரின் ஓய்வு. இந்தவாரம் வெற்றிநாயகனின் ஓய்வு. **It is a Sad news.**

-P.N.சுதர்சன்.



ரிங்கி பொன்ரிங், ஸ்ரீவ்வோவ்

அந்த வெற்றிப்பாதை நீங்கள் காட்டியதுதான்

---

# கைபட்டால் குற்றம் கால்பட்டால் குற்றம்


முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் பிஷன்சிங்பேடி இந்தியக் கிரிக்கெட் அணியின் அவுஸ்ரேலிய விஜயம் பற்றி நம்பிக்கையுடன் பேசவில்லை. அது ஒரு பலம் குறைந்த அணி என்றும், கடின உழைப்பை மேற்கொள்ள முடியாத அணி என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். சச்சின் டெண்டுல்கரின் ஆற்றல் பற்றியும் சந்தேகம் கொள்கிறார் அவர். சச்சின் விரைவில் களைத்துவிடும் நபராக மாறிவிட்டார் என்றும், அவரது முகத்திலிருந்த பிரகாசம் எல்லாம் போய்விட்டது என்றும் கூறுகிறார். மேலும் இந்திய அணிவீரர்களின் உடற்தகுதி பொறுத்தும் அவர் திருப்தி தெரிவிக்கவில்லை. குறைந்தது ஆறு அல்லது ஏழுபேராவது உடற்தகுதியில் பூரணத்தும் பெற்றவர்கள் அல்ல என்றும் கூறுகின்றார். சில வீரர்கள் ஆட்டத்தில் கலந்துகொள்ளாமல் பார்வையாளர்களாகவே இருக்க விரும்புபவர்கள் என்றும் கூறுகின்றார்.

வேகப்பந்து வீச்சாளர்களைப் பற்றியும் அவருக்கு நம்பிக்கையில்லை. அவுஸ்திரேலிய வீரர்கள் - இந்திய வேகப்பந்துவீச்சாளருக்கு செம்மையாகக் கொடுக்கப்போகிறார்கள் என்கிறார். தற்போதைய அவுஸ்ரேலிய அணி மிகப் பலம்வாய்ந்தது அல்ல என்றும் பேடி, இவர்களிடமே இந்தியா தோற்கப்போகின்றது என்றும் கூறுகிறார். இன்னொரு பக்கத்தில் இந்திய அணி வீரர்கள் பற்றி இன்னொரு குறைபாடொன்றையும் சுட்டிக்காட்டுகிறார். மிகுந்த வருமானம் ஒன்றையே இவர்கள் குறிக்கோளாகக் கொண்டவர்கள் என்கிறார். இந்திய அணியின் படிப்படியான வீழ்ச்சிக்கு வீரர்களின் பணம் பண்ணும் எண்ணமும் ஒருகாரணம் என்று கூறும் பேடி, இவர்கள் கிரிக்கெட் ஆடும்போது பணம் பற்றிச் சிந்திக்கிறார்கள், வருமான நோக்கம் கொண்டபோது, கிரிக்கெற் பற்றிச் சிந்திக்கிறார்கள் என்று குற்றம் சுமத்துகிறார்.

இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்கூலி பற்றியும் ஒரு முறைப்பாட்டைத் கொடுக்கிறார் இவர். அணித்தலைவர் என்பவர் அணியினை முன்னெடுத்துச் செல்பவர். அவர் அதனையே செய்ய வேண்டும். அதைவிடுத்து வாய்ச்சவால் காட்டிக்கொண்டு இருக்கக்கூடாது. வார்த்தையாடல்களை விட்டுவிட்டு தனது துடுப்பின் மூலம் பதிலளிக்கவேண்டும் என்கிறார் அவர். பொதுவாக பிஷன்சில் பேடி இந்திய அணியில் எதுவுமே இல்லை என்பதுபோல கருத்துக்கள் தெரிவித்திருப்பது இந்திய ரசிகர்களுக்குப் பெரும் மனவருத்தத்தைக் கொடுத்துள்ளது.

சில ரசிர்களின் கருத்துப்படி, இவர் செய்திருப்பது இந்திய அணியைத் தன்னம்பிக்கை இழக்கச் செய்யும் வகையில் அமைந்திருக்குமே ஒழிய, ஆரோக்கியமான விமர்சனமாக இருக்காது என்றே நம்புகிறார்கள். எந்தவகையிலும் அவுஸ்திரேலியாவில் போயிறங்கியிருக்கும் இந்திய அணி பலவீனங்கள் இருநதாலும் சோடைபோகும் அணியல்ல என்பதே பலரதும் கருத்தாகும். இவர் கூறிய கருத்துக்கள் நிச்சயம் இந்திய அணி வீரர்களையும் மனம் வருந்தச் செய்திருக்கக்கூடும். ஆனால், அதுவல்ல இப்போது முக்கியம் இவற்றையெல்லாம் மறந்து, தம் நாட்டவரே தம்மைக் கேவலப்படுத்த முனைகிறாரே என்று எண்ணாமல், இதனையே ஒரு சவாலாக எடுத்து உங்கள் எண்ணத்துக்கு மாறானவர்கள் நாங்கள் என்பதைச் சாதித்துக்காட்ட வேண்டும் இந்திய அணியினர். அதனை அவர்கள் செய்வார்கள் என்பதில் இந்திய கிரிக்கெட் அணிக்குச் சார்பான ரசிகர்களுக்குப் பெருத்த நம்பிக்கை உண்டு.

-வெரோனிக்கா



தயவு செய்து கண்ணாடியை மாற்றுங்கள்
பிஷன் சிங்பேடி

---

# கண்டதெல்லாம் குண்டா

பாகிஸ்தான் இந்தியாவுக்குள் தீவிரவாதிகளை அனுப்பி, இந்தியாவுக்குத் தொல்லை கொடுக்கிறதோ இல்லையோ, உள்நாட்டில் நடைபெறும் பல தீவிரவாதச் சம்பவங்களால் பாகிஸ்தானின் விளையாட்டுத்துறை ரசிகர்கள் - குறிப்பாக கிரிக்கெட் ரசிகர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை.

நீண்டகாலமாகவே பாகிஸ்தான் நாட்டுக்கு வருவதற்குப் பல சர்வதேசக் கிரிக்கெட் அணிகள் தயக்கம் காட்டிவந்தன. ஏதோ பாவம் பாகிஸ்தான் என்பதுபோலவே அணிகள் வந்துபோயின. அந்த வரிசையில், தற்போது நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்குச் செலலத் தயக்கம் காட்டியது.

பாகிஸ்தானுடன் நியூசிலாந்து ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடத் திட்டமிடப்பட்டிருந்த வேளையில், இந்தியாவில் முக்கோணத் தொடரில் ஆடிக்கொண்டிருந்த நியூசிலாந்து அணியின் முதன்மையான வீரர்கள் சிலர், தாங்கள் தமது பாதுகாப்பு நோக்கில் பாகிஸ்தான் செல்லப்போவதில்லை என்று கூறிவிட்டார்கள். கிரெய்க் மக்மிலன், ஸ்கொட்ஸ்டரிஸ், இயன் ·பட்லர், லூவின்சண்ட் ஆகியோரே அவர்கள். இதேவேளை, அணித்தலைவர் ஸ்ரீபன் பிளெமிங், நாதன் அஸ்ரல் இருவரும் காயங்கள் நிமித்தம் அணியில் இடம்பெறவில்லை. மேலும் மத்தியூ ஹோர்ன், அன்ரீ அடம்ஸ் இருவரும் காரணம் தெரிவிக்காமலே அணியில் இருந்து விலகத் தீர்மானித்திருந்தார்கள். அதேவேளை, ஷேன் பொண்ட் இன்னமும் உபாதைகளிலிருந்து விடுபடவில்லை. மேலும் பாகிஸ்தான் செல்ல வீரர்கள் மறுத்தமைக்கு முக்கிய காரணம் - அவர்களுக்கு கொலைமிரட்டல் ஈமெயில்மூலம் வந்ததுதான்.

ஆனாலும், ஏதோ நல்லகாலம் - நியூசிலாந்து அணியினர் பாகிஸ்தான் செல்கிறார்கள். என்றாலும், நாடறிந்த வீரர்கள் பங்குகொள்ளவில்லை என்பது ஒருகுறைதான். ஆனால், கால்களை இறுக்கமாகப் பதித்துக்கொள்ள புதியபல வீரர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டியிருக்கிறது. பாகிஸ்தான் செல்லும் நியூசிலாந்து அணி விபரம்-

கிறிஸ்கெயின்ஸ் (அணித் தலைவர்) டாமா கன்னிங், கிரெய்க்கம்மிங் கிறிஸ்ஹரிஸ், போல்ஹிட்ச்கொக், றிச்சட் ஜோன்ஸ், ஹமீஸ் மார்ஷல், மைக்கல்மேசன், பிரெண்டன் மக்கலம், ஜேக்கப்ஓறம், மத்தியூ கின்கிளெயர், டரல் ட·பி, டானியல் வெட்டோரி (உபதலைவர்) மத்தியூ வோக்கர், கெரிவோம்ஸ்லி.

**சரண்யன்**

பந்தைக்கூட குண்டென்கிறாங்களே



றமிஸ் ராஜா

---

# எனக்கொரு பார்ட்ணர் வேண்டுமடா

புதிய வேகப்பந்து வீச்சாளர்கள் இலங்கைக் கிரிக்கெட் அணியில் அறிமுகமாகிக்கொண்டிருக்கும் இந்தவேளையில், டில்ஹறா பெர்னாண்டோ மீண்டும் டெஸ்ட்போட்டிகளுக்குத் தயாராக இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. முள்ளந்தண்டு உபாதையால் நீண்ட நாட்களாக பாதிக்கப்பட்டிருந்த இவர், உலகக்கிண்ணப் போட்டிகளின்போதே இந்த உபாதையால் பாதிக்கப்பட்டிருந்தா. இதனாலேயே ஆட்டங்களில் நிறைய **NO BALLS** வீசியதாக இப்போது தெரியவருகிறது. தற்போது அவர் பூரண சுக மடைந்திருப்பதாகக் கூறும் இவரது பயிற்றுநர், முதல் தர நான்கு ஆட்டங்களில் 220 ஓட்டங்கள் கொடுத்து 12 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். அதோடு மொத்தம் 99 ஓவர்களையும் வீசியிருந்தார். கடந்த ஏப்பிரலில் நடைபெற்ற சார்ஜா போட்டிகளில் ஒரு ஆட்டத்தில் மட்டும் ஆடியிருந்தார். தற்போது ஏறத்தாழ ஏழு மாதங்களின்பின் தில்ஹறா மீண்டும் ஆடத்தயாராகின்றார். இதற்கு முன்னோடியாக இந்த 24 வயது இளைஞர் பிரஷிடெண்ட் **XI** அணியில் சேர்க்கப்படடுள்ளார். இவர் நன்கு சோபித்தால் இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கு உள்வாங்கப்படக்கூடும் இதேவேளை, தில்ஹறாவின் இடத்தை நிரப்புவதற்கு அணியில் சேர்க்கப்பட்ட பிரதாப் நிஸங்க இந்தத் தொடரில் ஆடஆயத்தமான நிலையில் இல்லை. ஏனெனின், அவருக்கு முழங்கால் உபாதை எனவே இலங்கையின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ், தனிமைப்படுத்தப்படாமல் இருக்க, தில்ஹாரா பெர்னாண்டோ அணியில் உள்வாங்கப்பட்டால் டெஸ்ட் ஆட்டம் பெறுமதிமிக்கதாகவேயிருக்கும். உண்மையில் தில்ஹறா பெர்னாண்டோ முள்ளந்தண்டு உபாதையை தானாகவே தேடிக்கொண்டார் என்றேகூறவேண்டும். ஏனெனில், இவரது பந்து வீச்சுமுறையில் காணப்பட்ட குறைபாடொன்றை நிவர்த்திசெய்துகொள்ள தன் பந்து வீச்சுமுறையை மாற்றப்போய் உபாதையைத் தேடிக்கொண்டார். ஆனால் மிகவேகமாகப் பந்து வீசக்கூடிய சகல அம்சங்களும் கொண்டவர் தில்ஹறா. இவரது டெஸ்ட் வாழ்க்கை மீண்டும சிறப்பாக ஆரம்பிக்கவேண்டும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பமாகும். **ரோஜா**



டில்கார பெர்னாண்டோ

இளமை இதோ இதோ

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்*
*திறப்பாடு இலாஅ தவர்.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### பிணக்குகளுக்கிடையே ஓர் இணக்கம்...!

சிறிலங்காவின் ஆளும் பேரினவாதத் தலைமைகளுக்கிடையே ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியை அடுத்து, ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலைக்கு முரண்பாடுகளுக்கிடையே ஓர் உடன்பாடு காணும், நிலையொன்று தற்காலிகமாக ஏற்படும் சூழல் உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

இங்கே முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் தற்காலிகம் என்ற சொல்லின் அர்த்தமே ஆகும்.

அதாவது, ஆளும் அதிகாரமற்ற, இரு பிரதான சக்திகளுக்கு இடையிலான அழுத்தமும், ஆழமும் மிக்கதான பாரம்பரிய பகை உணர்வுடன் கூடிய எந்த வகையிலும் நிரந்தரமான ஒட்டுறவு என்பதே ஏற்படும். சாத்தியமற்ற எதிரித்தனத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் தொடரும் பிணக்குகளுக்கு இடையில் ஓர் இணக்கத்திற்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏதோ ஓர் வகையில் ஏற்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக அதிகார சபைக்கான வரைபினை ரணில் தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசிடம் கையளித்ததை தொடர்ந்து நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று, கூறிக்கொண்டு மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி தன்வசம் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனநாயகத்திற்கு விரோதமான சட்டபூர்வ அரசியல் சதியொன்றின் மூலம் அபகரித்ததையடுத்து, ஏற்பட்ட அரசியல் குழப்பநிலையால் மிகவும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது. சமாதான நகர்வுகளின் எதிர்காலமும், சிறிலங்காவின் அமைதியுமே ஆகும்.

உண்மையில் ஜனாதிபதியின் பிரதான இலக்கு சமாதானத்தை குறிவைத்ததே ஆகும்.

சமாதான நகர்வுக்கு தடை ஏற்பட்டு, அது தொடர்பான முயற்சிகள் சிதைவடைந்தால் மட்டுமே, நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டாகும் நிலை ஏற்படும் என்ற நிலையில், சமாதானத்தைப் பாதிக்கும் இலக்கினைக் கொண்ட தனது நடவடிக்கைக்கு பாதுகாப்பினை கருதி மேற்கொண்ட ஒன்றாக விளக்கம் கொடுத்தமையானது, ஜனாதிபதி சந்திரிகாவின் மிக மோசமான அரசியல் இராஜதந்திரமாகும். இந்த அதிவேக அரசியல் காய்நகர்த்தல் ஆனது, ஏதோ ஒரு நோக்குடன் சிறிலங்காவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தனது கவனத்தை எல்லாம் குவிமையப்படுத்தி, இயங்கி வந்த சர்வதேச சமூகத்திற்கு, குறிப்பாக ஐரோப்பிய மற்றும் அமெரிக்க சார்பு உலகிற்கு அதிருப்தியையும், சினத்தையும் ஏற்படுத்தியது என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

இதனை சந்திரிகா ஓரளவுக்கு எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனாலும், அந்த நடவடிக்கை இந்தளவுக்கு ரணிலுக்கு சார்பானதும், தனக்கு எதிரானதுமான அரசியல் சூழலை, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் நேரடியாகவும், மறைமுகமாவும் ஏற்படுத்துமென அவரது அரசியல் ஆலோசகர்களால் அவருக்கு உணர்த்தப்படாதது அவரின் துரதிஷ்டமே ஆகும்.

ரணிலுக்கு ஆதரவாக அல்லாது, சமாதானத்திற்கு ஆதரவாகச் செயற்படுவதாக, தம்மை இனங்காட்டிய தேசிய - சர்வதேச சக்திகள், ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு இடையூறு செய்யும் அல்லது அதனைக் குழப்பும் சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளை பகிரங்கமாகவே ராஜதந்திர மொழியில் கண்டிக்கத் தொடங்கியது அவர் எதிர்பாராத ஒன்று.

அவரது இந்த அதிரடி அரசியல் சதியை, அவரது ஆதரவாளர்களான பேரினவாதிகளும், ஜே.வி.பி., சிஹல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற சிறு உதிரிப் பேரினவாத அரசியல் குழுக்களும், மகா சங்கமும் மட்டுமே பாராட்டி ஆதரித்தன.

இந்தவகையில் அவரின் இந்த நடவடிக்கையானது - அவரினதும், அவரது கட்சியினதும் அரசியல் எதிர்காலத்தையே பாதிக்கும் நிலையை ஏற்படுத்தும் என்பது அவர் முற்கூட்டியே கணிப்பிடாத ஒன்றாகும்.

அடுத்தது சந்திரிகா தனது நடவடிக்கைக்கு தேர்ந்தெடுத்த காலம் அவருக்கு மிகவும் பாதகமான ஒன்றேயாகும்.

விடுதலைப் புலிகள் தமது திட்டவரைபைச் சமர்ப்பித்த பின்னரும், ரணில் நாட்டில் இல்லாது அமெரிக்காவில் ஜனாதிபதி புஷ்ஷைச் சந்திக்கச் சென்ற சூழலும், தமிழர் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர்நாள் உரையை சர்வதேசமும், நாட்டு மக்களும் மிகவும் எதிர்பார்ப்புடன் கேட்கக் காத்திருந்த நிலையில் அவர் தனது அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டது அவரது அரசியல் முதிர்ச்சியின்மையின் வெளிப்பாடாக அமைந்தது.

அவர் தனது தவறுகளை மதிப்பீடு செய்து, அதன் விளைவுகளை உணர்வதற்குள் ரணில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டார். இது குழப்பத்தை நிரந்தரமாக்கி இருதரப்புப் பிரச்சினைகளை கௌரவப் பிரச்சினையாக்கிவிட்டது.

இத்துடன், சர்வதேச சமாதானத்தை வலியுறுத்தும் அழுத்தத்தை சந்திரிகாவை நோக்கி மையப்படுத்தியதும், தேசிய அரசை ஏற்படுத்தும் நிலைக்கு அவரைத்தள்ளியது.

இந்தக் கோரிக்கை, ரணிலால் நிராகரிக்கப்பட மாற்று வழிகளைத் தேடும் அவசர அவலம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டது.


இதன் வெளிப்பாடே இப்போது அவர் ரணிலுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள இணக்கத்திற்கு வந்திருப்பதாகும்.

ஆனாலும், ஓராண்டு காலத்திற்கு மட்டுமே இந்த இணக்கத்திற்கு அவர் விருப்பம் தெரிவித்துள்ளமையானது, இந்த விடயத்திலும் அவர் ஒரு தந்திரோபாயத்தைக் கைக்கொள்ள முயற்சிக்கிறார் என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

பிணக்குகளுக்கிடையே அவர் ஓர் தற்காலிக இணக்கத்திற்கு வரச்சம்மதித்துள்ளமையானது, சமாதானத்தை முன்னகர்த்தவா அல்லது வெறுமனே காலத்தை நகர்த்தி தனக்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளிலிருந்து சமாதானத்தின் பேரால் தப்பிக்கொள்ளவா என்பதே, இப்போதைய கேள்வி.

இந்த இணக்கத்திற்கு ரணில் சம்மதம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுவதானது, அவருக்கு ஏதோ ஒரு வகையில் இதற்கான தேவை ஏற்பட்டுள்ளதா, அல்லது ஏதோ ஒரு விதத்தில் அழுத்தம் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தையும் எழுப்பவே செய்கிறது.

## நாடும் நடப்பும்




# விருப்பு வாக்கு தேர்தல் முறையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை

## அமைச்சர் கரு ஜெயசூரியா தெரிவிப்பு

விருப்புத் தெரிவு வாக்குகள்மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்யும் தேர்தல் முறையில் மாற்றங்களைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். விருப்புத் தெரிவு வாக்குகள் மூலம் நாடாளுமன்றத்துக்கு உறுப்பினர்கள் தெரிவு செயயப்பட்டமையால் - ஒரே கட்சி உறுப்பினர்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கட்சி ஒற்றுமை பாதிக்கப்படுவதுடன், அபிவிருத்தித் திட்டங் களை முன்னெடுத்துச் செல்லுவது கடினமாகவுள்ளது.

விருப்புத் தெரிவு வாக்குமுறையை இல்லாமற்செய்வதன் மூலம் - உரிய தகுதிவாய்ந்த அங்கத்துவத்தை நாடாளுமன்றத்தில் ஏற்படுத்திக்கொள்ளமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமையானது நாட்டின் அபிவிருத்தியை வெகுவாகப் பாதித்துள்ளது. மக்கள் மத்தியில் சமாதானத்தின் மீதான நம்பிக்கை குறைந்துள்ளது.

எனவே சமாதானச் சூழலுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும் எனத் தெரிவித்த அமைச்சர், தற்போது தனது அமைச்சால் இலங்கையின் மின்சாரத் தேவையில் எழுபது சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (01)

# உதவி அரச அதிபர் பணிமனையில் நெடுந்தீவு பேருந்து தரிக்கும்!

நெடுந்தீவில் போக்குவரத்தில் ஈடுபட்டுவரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து வண்டியை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தரித்து நிற்க வைப்பதற்கு கொண்டுவரப்பட்ட தீர்மானம் - கடந்த வாரம் நடைபெற்ற மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஒரு வருடகாலமாக பேருந்து மாவலித்துறைமுகத்திலும், வீதியிலுமே தரித்துநின்றது. இதனால் பஸ்ஸிற்கு போதிய பாதுகாப்பின்மை காணப்படுகின்றது. அத்துடன் இவ்வாறு தரித்துநிற்கும் பஸ்வண்டியிலேயே வெளியிடங்களைச் சேர்ந்த ஓட்டுனர், நடத்துனர் போன்றோரும் தங்குகின்றனர். இதனால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே, இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பஸ்வண்டியை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தரித்து நிறுத்தினால், அதற்கு தாம் பாதுகாப்பு வழங்குவதாக நெடுந்தீவுப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த வருடம் பஸ்ஸிலிருந்து இரண்டு பற்றறிகள் திருட்டுப்போயிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (113)

# திடற்புலம் பகுதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை

திடற்புலம் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு எந்தவித நடவடிக்கையையும் இதுவரை மின்சாரசபை எடுக்கவில்லையென அந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இப்பிரதேச மக்கள் சனசமூக நிலையத்தினூடாக மின்சாரம் வழங்குமாறு பல தடவைகள் மின்சாரசபையிடம் கோரிக்கை விடுத்திருந்தபோதும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேச பொலிஸாரால் தேடப்பட்டுவந்த

# போதைபொருள் வர்த்தகர் ஒருவர் பொரளைப் பொலிஸாரால் கைது!

போதைவஸ்து கடத்தல் மற்றும் விற்பனை தொடர்பாக சர்வதேச பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் பொரளைப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

சுமார் இருபத்து மூன்று கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைவஸ்தை வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டே இவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த இவரை, இந்தியா உட்பட வேறு பல நாடுகளிலும் போதைவஸ்து வியாபாரம் தொடர்பாகத் தேடப்பட்டுவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், சர்வதேச சட்டங்களுக்கு அமைய இவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைவஸ்தின் பெறுமதி 46 மில்லியன் ரூபாவுக்கு மேல் எனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## சமுர்த்தி அதிகாரசபை

# உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கீழுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சமுர்த்தி அதிகார சபையின்கீழ் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடையே இருந்து இந்தப் பதவிக்கானவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் தரம் (IV),(V) பதவிகளுக்கும், உதவி உள்ளகக் கணக்காய்வாளர் தரம் (IV) ஆகிய பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு சகல பிரதேச செயலாளர்களையும் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் கோரியுள்ளார்.

ஒவ்வொரு பதவிகளுக்கும் கோரப்பட்டுள்ள தகமைகள் தொடர்பான விபரங்களை சகல பிரதேச செயலகங்களிலும் பார்வையிடமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (113)

## கிருஷாந்தி கொலை மரண தண்டனைக் கைதிகள்

# உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை பூர்த்தி

கிருஷாந்தி படுகொலைச் சம்பவம் தொடர்பாக மரணதண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவச் சிப்பாய்களும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனுமீதான விசாரணை பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடிப் பகுதியில் வைத்து பாடசாலை மாணவி கிருஷாந்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதுடன், அவரது தாயார், சகோதரன் மற்றும் அயலவர் ஒருவர் இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக்கூறி, ஐந்து இராணுவச் சிப்பாய்களுக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் மரண தண்டனை. விதித்தது. இதனை ஆட்சேபித்து தம்மீதான தண்டனையை குறைக்கவேண்டுமெனக்கோரி சம் பந்தப்பட்ட இராணுவச் சிப்பாய்களால் உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுமீதான விசாரணை நேற்றுடன் முற்றுப்பெற்றுள்ளதாகவும், இருதரப்பு சட்டத்தரணிகளினதும் வாதத் தொகுப்புக்கள் எதிர்வரும் டிசம்பர் 19 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மனுமீதான தீர்ப்பு எப்போது வழங்கப்படுமென நீதிமன்றம் எதுவித தகவலையும் வெளியிடவில்லை. (01)

# ஜனாதிபதி சந்திரிகா-பிரதமர் ரணில் அரசியல் முறுகல் நிலை தொடருமா?

கடந்தவாரம் தென்னிலங்கையின் அரசியலில், பலகட்ட நகர்வுகள் நடந்தேறியுள்ளன. ஜனாதிபதி-பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலிருந்து மூன்று அமைச்சுக்களைத் தமது பொறுப்பில் ஏற்றுக்கொண்ட பின்னர், நாட்டில் பொதுத்தேர்தல் ஒன்று விரைவில் வந்துவிடுமோ என்ற நிலைமை உருவாகியிருந்தது. இது இலங்கையின் முதலீடு, உல்லாசப் பயணத்துறை, உட்பட - மக்களின் இயல்பு வாழ்க்கையையும் பாதித்திருந்தது. யுத்தம் மண்டும் ஏற்பட்டு விடுமோ என்ற அசசம், அனைவரின் மத்தியிலும் உண்டானது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தக்கூடாது என வலியுறுத்திய தரப்புகள்கூட, யுத்தம் மீண்டும் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் தமது விமர்சனப் பார்வைகளை மாற்றிக் கொண்டன.

> **அமெரிக்காவிலிருந்து 8 மணித்தியாலங்களில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த பிரதமருக்கு கட்டுநாயக்காவிலிருந்து அலரிமாளிகை வந்து சேர்வதற்கு 9 மணித்தியாலங்கள் எடுத்தன.**



அதாவது, தமிழீழ விடுதலைப் புலிகள், பேச்சுவார்த்தையிலிருந்து விலகிச்செல்லக்கூடாது என்றளவில், அந்த விமர்சனக் கருத்துக்கள் அமைந்திருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் - ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் மூலம், தமிழீழத் தனிநாடு கிடைக்கப் போவதாக கருத்துக்களை கூறிவந்த ஜனாதிபதிகூட, தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்பாடு - சட்டரீதியற்றது என ஜனாதிபதி ஏற்கனவே கூறிவந்தார்.

ஆனால், மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் - அவரது நிலைப்பாட்டில் மாறுதல் ஏற்பட்டது. போர்நிறுத்த உடன்பாடு ஜனாதிபதி கையொப்பம் இடாத நிலையில், சட்டவிரோதமானதே. எனினும், நாட்டின் நலன்கருதி அதனை இரத்துச் செய்யப்போவதில்லை என்ற கருத்தை ஜனாதிபதி தற்சமயம் வெளியிட்டுள்ளார்.

நாட்டின் நலனுக்கு, போர்நிறுத்த உடன்பாடு பாதகமான நிலையை ஏற்படுத்தும் எனக்கூறிய அவர் - அதேவாயால், நாட்டின் நலனுக்கு இந்த ஒப்பந்தம் அனுகூலமானதே என்பதை ஏற்றுக்கொண்டார் என்றே கூறவேண்டும். இது ஜனாதிபதியின் தேசியநலக்கொள்கை அரசியலுக்குள் எவ்வாறு மாற்றம் அடைந்ததென்பதைச் சுட்டிக்காட்டி நிற்கிறது.

வரலாற்றில் எப்போதும் இலங்கையர்கள் தேசப்பற்று இல்லாதவர்கள் என்றே கதைகளில் கூறப்படுவதுண்டு. இலங்கையின் சுதந்திரம்கூட, இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரத்தின் அடிப்படையிலேயே கிடைத்தது என்பது அனைவருக்கும் தெரியும். போராட்டம் எதுவுமே இல்லாமல் பெற்றுக்கொண்ட சுதந்திரம் காரணமாகத்தான், இலங்கையர்கள் மத்தியில் தேசப்பற்று இல்லையெனக் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

இது அரசியலுக்குள் பிரவேசிக்கும் பெரும்பாலானோருக்கு பொருத்தமானதாகும்.

1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர், பதவிக்கு வந்த எந்தவொரு அரசியல்வாதியும், இலங்கையில் எதிர்காலத்தில் நடக்கப்போகும் பாரிய விபரீதங்களைக் கருத்திற்கொண்டு செயற்படவில்லை என்பது தெளிவு. காலத்துக்குக்காலம் சிங்கள அரசியல்வாதிகள் - தமது ஆட்சியை முன்கொண்டு செல்வதற்கும், தமது இனமான சிங்கள இனம் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதையும் கருத்திற்கொண்டு செயற்பட்டு வந்தனர். இதன் அடிப்படையிலேயே, அவர்கள் காலத்துக்குக்காலம், தமிழ்த் தலைவர்களுடன் ஒப்பந்தங்களையும் செய்துகொண்டனர். இவ்வாறு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் யாவுமே, இன்று இலங்கையில் பாரிய தீர்வுகாணமுடியாத பிரச்சினைக்கு வழிவகுத்துவிட்டன என்பது உண்மை. சுதந்திரத்துக்குப் பின்னர் - இலங்கையில் பல்வேறு தடவைகள் அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. எனினும், அவையாவும் நீண்டகால நோக்கில் கொண்டுவரப்பட்டவையல்ல.

இந்த நிலையிலேயே, 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தம் - முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை இன்னமும் நினைவூட்டிக்கொண்டிருக்கிறது. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் காரணமாக, இன்று முக்கிய இனப்பிரச்சினை ஒன்றுக்கு தீர்வுகாணப்படாத நிலைமை ஏற்பட்டிருப்பதைக் கொண்டு, அவரைப் பலரும் இன்று விமர்சிக்கின்றனர். எனினும், அந்த விமர்சனங்களுக்கு மத்தியில் அரசியல்வாதிகள், அவரின் அரசியலமைப்பைவிட்டு வெளியில் செல்லமுடியாத நிலையில் செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக, ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையானது, முன்னர் சிறுபான்மை இனங்களுக்கு வாய்ப்பற்றது எனக் கருதப்பட்டபோதும், நடைமுறையில் அது, சிறுபான்மையினருக்கு எதிரான நிலைப்பாட்டை ஏற்படுத்தி விட்டது. ஜனாதிபதி நாட்டின் நலன் கருதி, மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதாகக் கூறியபோதும், அதன் காரணமாக இது பிரதமரைப் பொறுத்தவரையில், அதிர்ச்சியைத் தந்தாலும், மறுபுறத்தில் அவருக்கு ஆறுதலையும் கொடுத்தது. தொடர்ந்தும் இனப்பிரச்சினைத்தீர்வு முன்னெடுப்புக்கள் எனற வகையில் செயற்பட்டு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - தமக்கு ஓய்வுதேவை என நினைத்துக் கொண்டிருந்தபோதே, ஜனாதிபதியின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதாவது, பிரதமர் நினைதத ஓய்வானது, தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டம் குறித்து யோசித்து, தமது நிலைப்பாட்டை சரிசெய்து கொள்வதற்கான ஓய்வாகும். அந்த ஓய்வு ஜனாதிபதியிடம் இருந்து தமக்கு கிடைக்கும் என அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.

தற்சமயம் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் - பிரதமருக்கு ஓய்வைக் கொடுத்திருப்பதுடன், தென்னிலங்கையில் சரிந்திருந்த தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. இதன் ஒரு கட்டமே, ரணில் அமெரிக்காவில் இருந்த வேளையில், மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை இழந்து, நாடு திரும்பிய பிரதமருக்கு விமான நிலையத்திலிருந்து மக்கள் வழங்கிய ஆதரவாகும். அமெரிக்காவிலிருந்து 8 மணித்தியாலங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பிரதமருக்கு. கட்டுநாயக்காவிலிருந்து அலரிமாளிகை வந்து சேர்வதற்கு 9 மணித்தியாலங்கள் எடுத்தன. இது பிரதமருக்கு ஜனாதிபதியால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்ட செல்வாக்கு உயர்வு நடவடிக்கை என்றே கூறவேண்டும்.

ஜனாதிபதி - தனது நீண்டகால நோக்கை நிறைவேற்றியபோதும், ரணிலின் ஆட்சியைத் தளம்பலடையச் செய்தமையால், அந்தத் தளம்பலின் பொறுப்புக்களையும் தாமே சுமக்கவேண்டியநிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது. எனவேதான், அவர் மீண்டும் பிரதம மந்திரியுடன் இணங்கிச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கடந்த மூன்றுவார காலப் பகுதியில் ஜனாதிபதி - பிரதமருடன் ஏற்படுத்திக் கொள்ளமுற்பட்ட இணக்கங்கள், பெரும்பாலும் வெற்றியாக அமைந்து விட்டதாகவே செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எனினும், அதிலும் பிரச்சினைகள் ஏற்பட்டிருப்பதாக மாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. ஜனாதிபதி - ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து, நிர் வாக அதிகாரம் ஒன்றை நடத்த முயற்சிக்கின்றபோதும், எதிர்கால நோக்கில் மக்கள் விடுதலை முன்னணியையும் விடாப்பிடியாக, பிடித்துக் கொண்டிருக்கிறார்.



இந்த நிலையில், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் எழுந்துள்ள அரசியலமைப்பு மற்றும் நிறைவேற்று அதிகாரம் என்பவற்றுக்கு இடையிலான பிரச்சினையைத் தீர்த்துவைக்க, முன்வந்துள்ள வர்த்தகத் துறையைச் சேர்ந்த மலிக் சமரவிக்கிரம மற்றும் மனோ தித்தவெல ஆகியோர் சில இணக்கங்களை முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஜனாதிபதி இந்தக் குழுவிடம் சமர்ப்பித்திருக்கும் சில விடயங்கள் - முரண்பாட்டை ஏற்படுத்தும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஊடகத்துறைக்கு கூட்டுக்குழு போன்ற பரிந்துரைகள் இவைகளில் அடங்குகின்றன. பாதுகாப்பமைச்சு மற்றும் ஊடகத்துறையை ஜனாபதி மண்டும் தம்மிடம் ஒப்படைக்க வேணடும் என்றே ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்க்கிறது. எனவே, இருதரப்பிலும் இணக்கப்பாடுகள் ஏற்படுத்துவதற்கு மேலும் காலம் எடுக்கலாம்.

அதேவேளை - இரண்டு தரப்பும் அந்த இணக்கங்களின் அடிப்படையில் தீர்வுவரும் என எதிர்பார்க்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் - ஸ்தம்பிதம் கண்டுள்ளன. ஏனெனில், ஜனாதிபதி முன்னர் போர்நிறுத்த உடன்படிக்கை சட்டரீதியற்றது எனக் குறிப்பிட்டிருந்தார். அதேபோல தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்காலப் பரிந்துரை - தமிழீழக் கோரிக்கைக்கு ஒப்பானது என அவர் தெரிவித்திருந்தார்.

இந்த இரண்டு கருத்தும், ஜனாதிபதியினால் மூன்று அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டதை அடுத்து ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியினால் முன்னுரைக்கப்பட்டு, பூதாகர நிலையாக வெளிக்கொணரப்பட்டது. அதேநேரம் ஏற்கனவே சமாதான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டிய வேளையில், ஜனாதிபதி அதற்கெதிராகக்கூறிய கருத்துக்களும், அவர் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர், தமிழ் மக்கள் மத்தியில் அச்ச உணர்வுகளை ஏற்படுத்தின. ஆனால், அந்தக் கருத்துக்களை கூறிய ஜனாதிபதி, இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால பரிந்துரையையும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படையாக ஏற்றுக் கொள்ளலாம் எனக் கூறியுள்ளார்.

இவையாவும் அரசியல் மாற்றங்களின் அடிப்படையில், ஏற்பட்ட சொந்த விருப்பு வெறுப்புகள் என்பதைவிட, உள்நாட்டு மற்றும் சர்வதேச நெருக்குதல்களும் காரணமாகும் என்பது கூறவேண்டிய ஒன்றாகும். ஜனாதிபதி இவ்வாறான நிலைப்பாட்டைக்கொண்டுள்ள அதேநேரம், பிரதம மந்திரியின் நிலைப்பாடு என்னவாக அமைந்துள்ளது என்பது கருதத்திற்கொள்ள வேண்டியதாகும். சமாதான முன்னெடுப்பை மிகவும் தீவிரமாக முன்கொண்டு சென்ற பிரதமர்-தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்கால நிர்வாக திட்டவரைபை சமர்ப்பித்த பின்னர், நெருக்கடி நிலைக்கு உள்ளானார். 20 வருட காலமாக போர் ஒன்றில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப்புலிகள், அரசியல் தீர்வுககான திட்டவரைபு ஒன்றை சமர்ப்பித்தமை வரவேற்கத்தக்கது எனப் பிரதமர் தெரிவித்ததோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை தீர்த்துவைப்பதற்கு அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என ஆலோசித்துக் கொண்டிருந்த நிலையிலேயே, ஜனாதிபதி தமது எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்.

தமது சொந்த அரசியலைக் கைவிட்டு இருபெரும் கட்சிகளும் ஒன்றிணையுமா? என்பது கேள்விக்குரியதே.

## தெற்குத் திசையினிலே

## கொழும்பிலிருந்து இந்திரஜித்

---

# சேவையில் ஈடுபட்ட மினிபஸ் நடத்துநர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்

(களுத்துறை)

மறியல் போராட்டவேளையின் போது, சேவையிலீடுபட்ட மினிபஸ் ஒன்றின் நடத்துநர் ஒருவர் - இனந்தெரியாதோரால் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர், கடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வாகனங்களைக் கொள்வனவு செய்யும்போது, விதிக்கப்படும் வரியைக் குறைக்கக்கோரி, மாத்தளை மற்றும் களுத்துறைப் பகுதிகளைச் சேர்ந்த தனியார் பஸ் உரிமையாளர்கள் கடந்த மூன்று நாட்களாக மறியல் போராட்டத்தில் ஒன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த மறியல் போராட்டவேளையில், சில மினிபஸ்கள் சேவையில் ஈடுபட்டதாகவும், அவ்வாறு சேவையில் ஈடுபட்ட பஸ் வண்டியொன்றின நடத்துநர் ஒருவரே தாக்கப்பட்டு கடத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இதுவரை இவர் யாரால் கடத்தப்பட்டு, எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது தொடர்பான விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக தென்மாகாண தனியார் பஸ் சேவைச் சங்கத்தலைவர் - நிஸாந்த முத்துகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, மினிபஸ் சாரதிகள் தமக்கும், பொலிஸாருக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகள் தோன்றுவதாகவும், இது தொடர்பாக உரியநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார் (01)

# பலஸ்தீன மேற்குக் கரை துருப்புக்களை வாபஸ் பெறுவதற்கு இஸ்ரேல் திட்டம்!

## இஸ்ரேலிய பிரதமர் ஷரோன் தெரிவிப்பு



பலஸ்தீன நகரான மேற்குக் கரைப்பகுதியில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலியத் துருப்புக்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன், அந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள யூதர்களின் குடியிருப்புக்களை இடம்மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளதாக - இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் இஸ்ரேலியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

தம்மால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சில பிரதேசங்களை சமாதானத்திற்காக விட்டுக்கொடுப்பதற்கு தயாராக உள்ளதாகவும், பேச்சுக்கள் தோல்வியடையும் பட்சத்தில் சில தன்னிச்சையான முடிவுகளை எடுப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் தோல்வி அடையுமானால் - தற்போது பலஸ்தீனர்கள் வாழும் நிலப்பரப்பில் 40 வீதமே அவர்கள்வசம் அனுமதிக்கப்படும் எனவும் ஷரோன் மேலும் தெரிவித்தார்.

இதன்மூலம் மேற்குக்கரைப் பிரதேசத்தின் முழுப்பகுதியும் இஸ்ரேல் வசமாக்கப்படும். அத்துடன், இஸ்ரேல் அரசு - பலஸ்தீனப் பிரதமர் கூரேயுடன் நடத்தும் இறுதிப்பேச்சாக இது அமையக்கூடும் எனவும், ஷரோன் தெரிவித்தார்.



இந்திய எல்லைக் காவல் படையினர், காஷ்மீரில் பாகிஸ்தான் இந்திய எல்லைக் கோட்டுக்கு அருகே காவலில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்.

## பாதுகாப்பு வேலி தொடர்பில்

# ஐ.நாவின் தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரித்துள்ளது

இஸ்ரேல் அரசு பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியில் அமைத்துவரும் பாதுகாப்பு வேலியை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை - இஸ்ரேல் அனுசரித்து நடந்துகொள்ளவில்லை என, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அடுத்த வாரம் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இஸ்ரேலிய மக்களை தீவிரவாதிகளிடம் இருந்து காப்பாற்றும் கடமை அந்நாட்டு அரசிற்குரியதெனவும், ஆனால், 1967 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட எல்லையில் இருந்து தற்போது 13 மைல்களை மேலதிகமாக இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளமையானது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது எனவும் கோபி அனான் மேலும் தெரிவித்தார்.



இதேவேளை, பலஸ்தீனத்துக்கான ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி நாசர் அல் கிட்வா இது தொடர்பாக தெரிவிக்கையில் - ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோளை இஸரேல் புறக்கணித்தால், சர்வதேச நீதிமன்றம் இந்த விடயத்தில் தலையிட்டு ஆலோசிப்பதற்கு ஐ.நா சபையில் மீண்டும் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாக தெரிவித்தார்.

## ஜோர்ஜ் புஷ்ஷின் விஜயத்தின் பின்னர்

# ஈராக்கின் வட பகுதி மொசூலில் அமெரிக்க படை மீது தாக்குதல்



அமெரிக்க அதிபரின் ஈராக்கிய விஜயத்தின் பின் 'மொசூலின்' வடபகுதியில் அமைந்துள்ள 101 ஆவது விமானப் படையின் தலைமைக் காரியாலயத்தின் மீது நான்கு மோட்டார்குண்டுகள் வீசப்பட்டதாகவும், இத்தாக்குதலில் அமெரிக்க படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, பாக்தாத்தில் அமைந்துள்ள முதலாவது காலால் படையினரை நோக்கி 7 வயதுப் பையன் ஒருவன் ஏ.கே 47 ரக துப்பாக்கியால் குறிபார்த்தபோது அது தவறுதலாக வெடித்து சிறுவனின் காலைத்தாக்கியதில் சிறுவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஈராக்கிலுள்ள அமெரிக்க மத்திய கட்டளையகம் தெரிவித்தது.

மேலும், அமெரிக்க முன்னாள் அதிபரின் மனைவி கிலாரி கிளிண்டனும் ஈராக்கிற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். தனது ஈராக்கிய விஜயத்தின்போது - அமெரிக்க படையினரின் சேவையைப்பாராட்டியுள்ளதுடன், ஈராக்கிற்கான அமெரிக்காவின் மனிதாபிமானப் பணிகள் பற்றியும் குறிப்பிடடார்.

# பிரான்ஸில் முஸ்லிம் பெண்கள் பர்தா அணியத் தடைவிதிப்பு!

## அந்நாட்டு பிரதமர் அறிவிப்பு




பிரான்ஸில் பாடசாலையில் கற்கும் முஸ்லிம் மாணவர்களும், பொது ஸ்தாபனங்களில் கடமைபுரியும் முஸ்லிம் பெண்களும் அவர்களின் மதத்தின் ஒரு அடையாளமாக அணியும் 'பர்தாவினை' இனிமேல் அணியக்கூடாது என, பிரான்ஸ் பிரதமர் ஜீன் ரபரின் அறிவித்துள்ளார்.

பிரான்ஸில் உள்ள பாடசாலைகளுக்கு பர்தா அணிந்துவந்த முஸ்லிம் பெண்கள் பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

பிரான்ஸ் பிரதமரின் இந்த அறிவிப்பால் - முஸ்லிம்கள் கடும் ஆத்திரம் அடைந்துள்ளதாகவும், அவர்கள் வன்முறைகளில் ஈடுபடுவதற்குரிய சாத்தியங்கள் இருப்பதாகவும் அஞ்சப்படுகிறது.

பிரான்ஸின் ஆளும் கட்சியிலுள்ள 90 வீதமான அங்கத்தவர்கள் ஒரு இனத்தின் மத அல்லது அரசியல் சின்னங்களை அடையாளப்படுத்தும் முகமாக எதையும் நாட்டில் அணியக்கூடாதென தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரதமர் ரபரின் - இவ்வாறான சட்டமொன்றைக் கொண்டுவந்ததன் மூலம் பிரான்ஸின் மதசார்பின்மையையும், மத அடிப்படை விதிகளினால் பெண்கள் மீது திணிக்கப்படும் அழுத்தங்களையும் தடைசெய்ய முடியுமெனத் தெரிவித்துள்ளார்.


### ஸம்பிய விமான விபத்துக்கு விமானியின் தவறே காரணமாம்!

ஸம்பிய நாட்டு விமானப்படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று சபோன் என்ற இடத்தில் 1993 ஆம் ஆண்டு வீழ்ந்து நொருங்கியபோது அதில் பிரயாணம் செய்த ஸம்பிய நாட்டு உதைபந்தாட்ட வீரர்கள 18 பேர் கொல்லப்படடனர். இந்த விபத்திற்கு விமானத்தின் இடது பக்கத்தில் அமைந்திருந்த இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே காரணமென முன்னர் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், 10 ஆண்டுகளின் பின்னர் தற்போது இந்த விபத்துத் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி வலது பக்கத்தில் அமைந்துள்ள இயந்திரத்தின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் கருவியை விமானி தவறுதலாக நிறுத்தியிருந்தமையே விபத்துக்குக் காரணமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செயற்கைக்கோளை கொண்டுசென்ற றொக்கட் வானில் ஜப்பானால் அழிப்பு!



வேவுப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்கென தயாரிக்கப்பட்ட இரு செயற்கைக் கோள்களை எடுத்துச்சென்ற றொக்கட் ஒன்றை - வான்வெளியில் வைத்து நேற்று அழித்துள்ளதாக, ஜப்பான் அறிவித்துள்ளது.

ஜப்பானில் தயாரிக்கப்பட்ட எச் 2 எ ரகத்தைச் சேர்ந்த றொக்கட் பலத்த கரகோஷத்தின் மத்தியில் ரோக்கியோவில் இருந்து 620 மைல்களில் அமைந்துள்ள ரணி கெசிமா என்ற பிரதேசத்திலுள்ள தளத்தில் இருந்து புறப்பட்ட சில நிமிட நேரத்தில் தொடர்ந்து செயற்படமுடியாத நிலையில் இருப்பதால் அதைத் அழிக்கவேண்டியேற்பட்டதாக, ஜப்பான் விண்வெளி கட்டுப்பாட்டுத் தளம் தெரிவித்தது.

இந்த விண்கலத்தின் பிரயாணம் முன்னரும் இருமுறை ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வடகொரியா அணு ஆயுதங்களை தாயாரிக்கின்றதா என்பதை அறிவதற்கு ஜப்பான் ஏற்கனவே இரண்டு செயற்கைக் கோள்களை அனுப்பியிருந்தது. இந்த இரண்டு செயற்கைக்கோளும் வெற்றிகரமாகச் செயற்பட்டுவருவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது.

வடகொரியா 1998 ஆம் ஆண்டு அதன் பொயோகையாங் பிரதேசத்தில் இருந்து நடத்திய கண்டம் தாண்டிச் செல்லும் ஏவுகணைப் பரிசோதனையின் பின்பே - ஜப்பான் வட கொரியா மீதான வேவுப் பணிகளை மேற்கொண்டுவருகிறது.

## ஊர்சுற்றி எழுதுவது

'இந்த நாட்டில் தொடர்ச்சியாக மாறிமாறி ஆட்சி புரிந்துவந்த கட்சிகள் மேற்கொண்ட தவறான செயற்பாடுகளே இன்றைய நெருக்கடி உருவாகக் காரணம்'

இப்படிச் சந்திரிகா அம்மையார் கொழும்பில் நடந்த ஒரு பெரியவரின் நினைவுதினக் கூட்டத்தில் பேசியிருந்தார். பத்திரிகைகளில் அம்மையாரின் பேச்சு வெளிவந்திருந்ததே நீர் பார்க்கவில்லையா? என்று கேட்டார் நண்பர்.

நானும் பார்த்தேன் நல்லிணக்க அரசு அமைப்பதற்குத் தன்னுடன் சேர்ந்து ஒத்துழைக்கும்படி ரணிலுக்கும், அவரது கட்சியினருக்கும் அழைப்புவிடும் சந்திரிகா, தமது தந்தையாரின் கொலையுடனும் அவர்களுக்கு (ஐக்கிய தேசியக் கட்சி) பங்குண்டென்றும், தனது கணவர் கொலை செய்யப்பட்டதற்கும் அவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

இவற்றை மறைக்க முடியாதென்றும் அம்மையார் சொன்னாலும், நாட்டின் எதிர்கால நன்மை கருதி அவற்றை ஒதுக்கித்தள்ளிவிட்டு ஒன்றிணைந்து செயற்படவேண்டிய நிலையேற்பட்டுள்ளதென்றும் கூறியிருக்கிறார்.

ஜே.வி.பி.தான் தனது கணவரைக் கொலை செய்ததென்பதை விசாரணை ஆணைக்குழு நியமித்து உறுதிப்படுத்தியவர் சந்திரிகா. இப்பொழுது ஜே.வி.பி.யுடன் கூட்டுவைத்துக் கொள்வதற்கான பேச்சுக்களிலும் ஈடுபட்டுவந்தார்.

அதுவும் நாட்டு நலன் கருதித்தான் மேற்கொண்டார். நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தான் மூன்று முக்கிய அமைச்சுக்களை அதிரடியாக பொறுப்பேற்றார்.

இப்பொழுது பதவிகளை எதிர்பாராமல், இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று ஜனாதிபதி கூறுகிறார்.

இரு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று உண்மையிலேயே சந்திரிகா அம்மையார் விரும்பினால், என் அப்பன் கொலையிலும், என் புருஷன் கொலையிலும் அவர்களுக்குச் சம்பந்தம் இருக்கு என்று சொல்லியிருப்பாரா?

சந்திரிகா அம்மையார் இப்போதெல்லாம் என்ன பேசுகிறார், என்ன செய்கிறாரென்பதை மக்களால் விளங்கிக்கொள்ள முடியாமலிருக்கிறது.

தனக்கே நன்கு விளங்கிக் கொண்ட பின்தான் பேசுகிறாரா செய்கிறாரா? இப்படித்தான் மக்களில் சிலர் கேட்கிறார்கள்.

பற்றற்ற நிலையில் அம்மா பேசுகிறார். அதிகார மோகமே இல்லை என்று சொல்கிறார். எதைச் செய்தாலும், எதைப் பேசினாலும் நாட்டின் நலன் கருதியே செய்வதாகச் சொல்லுகின்றார்.

இப்படியே காலத்தைக் கொஞ்சம் கடத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலுக்கு நல்லிணக்க அரசை அமைத்து நாட்டைக்காக்கத் தாம் எடுத்த முயற்சிக்கு ரணிலும் அவரது கட்சியும் ஒத்துழைக்கவில்லையென்று குற்றம் சுமத்திப் பிரசாரம் செய்யலாமென்று அம்மா திட்டம் போடுவதாகத் தெரிகிறது.

நாடு பிளவுபடாமலிருப்பதற்கே தான் முன்னர் கொண்டுவந்த திட்டத்தையும் வைத்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரமளிக்கும் வகையில், புதிய அரசியலமைப்பை உருவாககவும் அவர் தேர்தலில் அனுமதி கோரக்கூடும்.

இந்தப் பிரசாரத்தில் இனவெறியையும் தூண்டிவிடலாம். ஊடகங்களும் இப்பொழுது அம்மையாரின் கைகளில், போதாக்குறைக்கு இப்பொழுதே சிங்கள ஆங்கில ஊடகங்கள் இனத்துவேஷத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றன.

புதிய அரசியலமைப்பை உருவாக்கி நாடாளுமன்றத்தில் சந்திரிகா கட்சி வெற்றிபெற்றால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் இரண்டாவது தவணைக்காலமும் முடிந்ததும், பிரதமமந்திரியாகப் பதவியேற்றுத் தொடர்ந்து ஆட்சியிலிருக்கலாம் என்பது அம்மையாரின் திட்டம்போல் தெரிகிறது.

அதிகாரமோகம் இல்லாத ஆட்சியமையும் என்று சொல்கிறாரா என்றார் இடைநடுவில் நுழைந்த எதிர் வீட்டுக்காரர்!

ஆனால், தலைவர் பிரபாகரன் தனது மாவீரர்தின உரையில் விடுத்த எச்சரிக்கை இன்னமும் அவர்களுக்குப் புரியவில்லையோ!

ஒவ்வோராண்டும் தலைவர் உறுதியாகத்தான் விஷயத்தை எடுத்துக் சொல்லிவருகிறார். இது அவர்களுக்குக் காலங்கடந்துதான் விளங்கிக்கொள்ள முடிகிறது அல்லது வேறு பாஷையில் சொன்னால்தான் புரியும்.

இனியும் சமாதான முயற்சிகளை அம்மாவோ, ரணிலோ தங்களுக்குள் போட்டி என்று காலங்கடத்தலாம் என்று நினைக்க மாட்டார்களென்று எதிர்பார்ப்போம்!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

"கனகண்ணை ஒரு சேதி தெரியுமோ" என்றபடி சைக்கிளில் வந்து சந்தியில் இறங்கினார் மணியத்தார்.

என்னடாப்பா அப்படி பெரிய புதினம்... சந்திரிகாவும், ரணிலும் தற்காலிகமாக ஓராண்டுக்கு அதிகாரத்தைப் பகிர இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள் என்ற செய்திதானே... என்றார் கனகர். உனக்கு எப்பவும் அரசியல்தான்... இது அதில்லை வேற செய்தி எங்கட சிங்கப்பூர் செல்லற்றை பேத்திக்கு கலியாணப் பதிவாம்... "ஏன் அவற்ற மருமோன் கனடாவிலிருந்து வந்திட்டானே? "அவன் எப்பிடி வாறதாம். அவனுக்குத்தான் இன்னும் அங்க பிரஜாவுரிமை கிடைக்கவில்லையே...

"பிறகு...?

அவன் அங்கிருந்து தன்ர சினேகிதனான, அதாவது அங்கை பிரஜாவுரிமைபெற்ற ஒருத்தனை இங்க அனுப்புறானாம். அவன் வந்து செல்லற்றை பேத்தியை சும்மா பதிவுத் திருமணம் செய்துபோட்டு..., அந்தப் பத்திரத்துடனபோய், பிறகு கனடாவிலிருந்து அவளுக்கு ஸ்பொன்சர் பண்ணி கூப்பிட்டு செல்லற்றை மருமோனிட்டை சேர்க்கப்போறானாம்...

"அட என்ன இழவடா... இது...?

செல்லற்றை பேத்தி எப்படியும் ஒரு வருடத்துக்குள்ள கனடாவிற்கு... அந்தப் பெடியன்ர பெஞ்சாதி என்ற பேரில கனடா போய்... பிறகு அவளை விவாகரத்துச் செய்து போட்டு, செல்லற்றை மருமோனை கலியாணம் முடிப்பாளாம்...

"எல்லாம் கொழும்பு அரசியல் போல குழப்பமா இருக்கு... ஏன் இதுவும் சந்திரிகா... ரணில் தற்காலிக இணக்கப்பாடு போல் இல்லையே...

ஓமோம் அவையும் ஓராண்டுக்குத்தானே அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளப்போகினம்... பிறகு விவாகரத்துச் செய்வதைப்போல் பிரிந்துவிடப் போகினம் எல்லே... "என்னமோ எல்லாத்தையும் நினைக்க எனக்கு தலையைச் சுத்துது மணியம்...

-தெருவாசி

## வடமராட்சி வல்லிபுர...

தெற்கு குடத்தனை ,அதே இடத்தைச் சேர்ந்த இராமசாமி - சத்தியகுமார் (வயது-23) ஆகிய இருவரும் நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் தாக்குதலில் சிறு காயங்களுக்குள்ளான சிறுவர்களான துரைசிங்கம்-ரஜிகாந்தன் (வயது -15) தேவராஜ் - ராஜ் (வயது -15) மகேந்திரம் - மதீஸ்வரன் (வயது -14) ஆகிய மூவரும் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களுடன் வல்லி-தேவராஜா (வயது-37) சதாசிவம்-றமேஸ்வரன் (வயது-22) ஆகிய இருவரும் படையினரின் தாக்குதலுக்கு உள்ளானவர்களாவர்.

இதேவேளை, நேற்று மாலை இவர்களது வீடுகளுக்கு சென்ற படையினர் தாக்குதலுக்குள்ளானவர்களை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லக்கூடாது எனவும்,இந்தச் சம்பவம் தொடர்பாக எவரிடமும் புகார்செய்யக்கூடாதெனவும் எச்சரித்துள்ளனர்.(202)

SINHALA GATEWAY BY MR.MALWANA

மூன்றே மாதங்களில் நீங்களும் சிங்கள மொழியை சரளமாகக் கதைக்கலாம்.
வழமைபோல இப்போது நீங்களும் இணைந்து படிக்கலாம்.
எமது புதிய தபால் மூல வகுப்புகள்
இப்போது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
விபரங்களுக்கு எழுதவும் அல்லது நேரில் வரவும்.
சிங்களமொழி வழிகாட்டல் ஆசிரியர்
திரு.மல்வான
இல.56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(சி-1842)

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்

# வடக்கு - கிழக்கின் சுற்றுச் சூழல் தொடர்பா சர்வதேச கருத்தரங்கு - நாளை ஆரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கின் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் தொடர்பான நான்கு நாள் சர்வதேச கருத்தரங்கு - நாளை முதல் எதிர்வரும் நான்காம் திகதி வரை, யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், பொருண்மிய மதியுரையகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கிற்கான நிதியுதவியை ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டம் வழங்கியுள்ளது.

இரண்டு தசாப்தகாலமாக நீடித்த போரின் விளைவாக சமநிலையிழந்து, பல்வகைச் சிதைவுக்கு உட்பட்டிருக்கும் சூழல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ளவேண்டியது அவசியமானது. இந்தப் பிரதேசங்களின் இன்றைய சூழல் நிலைமைகளை ஆய்வு செய்து, நிலவுகின்ற பிரச்சினைகளை இனங்கண்டு, பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பதே இத்தொடர் கருத்தரங்கின் முதன்மை நோக்கமாகும். இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற வெளிநாட்டு, உள்நாட்டு நிபுணர்கள் பலர் பங்குபற்றி இக்கருத்தரங்கைச் சிறப்பிக்க உள்ளனர்.

பட்டப்பின் படிப்புப்பீட பீடாதிபதி பேராசிரியர் க.சிற்றம்பலம் இக்கருத்தரங்கைத் தொடக்கி வைத்துத் தலைமை தாங்குவார்.

முதலாம்நாள் தொடக்க நிகழ்வின்போது - துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி மிக்குவல் பேர்மியா மற்றும் பிரதம விருந்தினராக ஜப்பானியரான ஹியாஷி நக்கமுரா ஆகியோர் கலந்து[...] வர். அத்துடன், கலாநி[...] மகேஸ்வரன் கலந்துகொண்டு [...] நிகழ்த்துவார்.

'இயற்கை வளங்களை இன[...]ணும் பட்டியல்' எனும் கருப்[...]ருளை அடிப்படையாகக் செ[...] மாலை அமர்வுக்கு கிழக்கு[...] கலைக்கழகத் துணைவேந்த[...] சிரியர் எம்.எஸ்.மு[...] தாங்குவார். க[...] சுந்தரா, பேராசி[...] யாப்பிள்ளை ஆகி[...] திகளாகக் கலந்துகொ[...] நிகழ்த்துவர்.

### இரணைமடுக்குளம் நிரம்பி வருகிறது!

கடந்த ஒருவாரமாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையினால் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 30 அடி 5 அங்குலமாக உயர்ந்துள்ளது. நீர் நிரம்பிக் குளம் பெருக்கெடுப்பதைத் தடுப்பதற்காக வான் கதவுகளை திறந்துவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

## கடந்தகால வேற்றுமைகளை மறந்துவிட்[...] சமாதான முயற்சியை முன்னெடுக்க வேண்[...]

### ஜனாதிபதி சந்திரிகா மீளவும் தெரிவிப்[...]

கடந்தகால வேறுபாடுகளை மறந்து சமாதானப் பேச்சுவார்த்தையை மீளத் தொடங்கி, நாட்டைச் சமாதானப் பாதையில் இட்டுச் செல்லும் நேரம் வந்துள்ளதாக, ஜனாதிபதி சந்திரிகா நேற்று முன்தினம் மீளவும் தெரிவித்தார்.

கொழும்பு நகர மண்டபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தந்தையாரான டி.ஏ. ராஜபக்ஷவின் 36 ஆவது ஆண்டு நிறைவு தினம் அனுஷ்டிக்கப்பட்ட வேளையில், அங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் நன்மை கருதி நான் ஐக்கிய தேசிய முன்னணி[...] இணைந்து செயற்படத் த[...] உள்ளேன். ஆனாலும், ப[...]வற்றை மறப்பதென்பது பிரச்சி[...]குரியதுதான். ஏனெனில், ஐ[...] தேசிய முன்னணியினர் தொட[...]யாக என்மீது தாக்குதலை [...] கொண்டுள்ளனர். நான் இ[...]தும் நாட்டின் நன்மை[...]தையே செய்துகொ[...]

மகிந்த ராஜபக்[...] ராஜபக்ஷ போன்[...] உடையவர்களின் தலைமை[...]தால் சிறிலங்கா சுதந்தி[...]யின் எதிர்காலம் நல்ல [...] முன்னெடுத்துச் செல்லப்[...]வும், ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

## சந்திரிகா....

கள் குறித்து ஆராய்ந்த பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் இந்த முடிவை எடுத்ததாக கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

சமாதான முயற்சியை முன்னெடுப்பதற்கு, சமரச முயற்சியின் பெயரால் ஊடகத்துறை அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் வைத்திருப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் - இதனால் இந்தத் திட்டத்திற்கமைவாக சமாதானப் பேச்சுக்களில் இணைந்து செல்வது சாத்தியமல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி பறித்த...

தான முயற்சியில் நடுநிலையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசு, தனது சமாதான முயற்சிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

இதனையடுத்து ஜனாதிபதிக்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால், இந்த மூன்று அமைச்சுக்களின் பிரதி அமைச்சர் பதவியை ஐ.தே. கட்சியைப் பொறுப்பேற்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு ஐ.தே.க மறுத்துள்ள நிலையில் ஜனாதிபதி, பொதுஜன ஐக்கிய முன்னணியிலுள்ள மூன்று முக்கிய நாடாளுமன்ற உறு[...]ளுக்கு இப்பதவியை வ[...] தீர்மானித்துள்ளார். பிரதிப்[...] அமைச்சராக மங்கள சம[...]யும், உள்துறை ஊட[...] அமைச்சராக சுசில் பிரேம[...]வையும், பிரதி அமைச்சராக பிரியதர்சன யாப்பாவையும் ந[...] முடிவு செய்துள்ளார். ஜனா[...] தனக்குள்ள அதிகாரங்களைப்[...]டுத்தி இந்த நியமனங்களை [...]வுள்ளதாக ஜனாதிபதியின் வ[...]களிலிருந்து தெரியவருகின்[...]

## கொழும்பு....

குறித்து விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இந்த தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று, பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

## யாழ்....

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய வட பகுதிக்கான கட்டளை அதிகாரியாகப் பதவியுயர்வு வழங்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த நியமனம் குறித்து - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆலோசகர்களுடன் ஆராய்ந்துள்ளதாகவும் 'திவயின' மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

## வயற்காவலுக்குச் சென்ற..

வழங்கியுள்ளனர். இதேவேளை - ஆலங்கேணி பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் - நாளை ஆரம்பமாகும் க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் அடங்குவர். இவர்களில் 80 மாணவர்களில் 55 பேர் ஆலங்கேணிப பாடசாலையில் தோற்றவுள்ளபோதிலும், மிகுதி 25 பேர் கிண்ணியாவுக்கே செல்லவேண்டும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் இந்த மாணவர்கள் கிண்ணியா செல்ல முடியாத காரணத்தினால் தம்மை ஆலங்கேணியில் பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்குமாறு கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளனர்.

கிண்ணியாவிலிருந்து [...] கல்வி நிலையத்திற்குச்[...] மூன்று இளைஞர்கள் திரு[...]ரத்தில் வைத்து இனம்[...]ரால் நேற்றைய தின[...]யாகத் தாக்கப்பட்டுள்[...]

மேற்படி சம்பவம் [...] பாதுகாப்பு நடவடிக்கை[...] படுத்துமாறும், அங்கு[...] விசேட பொலிஸ் பிரி[...] ஆரம்பிக்குமாறும், ஜ[...] கோணமலை சிரேஷ்[...] அத்தியட்சகருக்கு உ[...]ளார். இன்று இந்தப் பி[...] பாதுகாப்பு நிலைமை [...] பேச்சுவார்த்தை ஒன்[...] விருப்பதாக ஜனாதிப[...]கள் தெரிவித்தன.




O/L - 200
பரீட்சை எழு[...]
மாணவர்களு[...]
எமது வாழ்த்துக்[...]
DM[...]
யாழ்.நக[...]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிட[...]